உ.

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கங.] ஆனந்தஹூ தைமீ [பகுதி-ங.

Vol. XIII. January—February, 1915. No. 3.

யசோதரகாவிய ஆராய்ச்சி.

"செந்தமிழ்" (தொகுதி-கஉ-பகுதி-அ) உஅ௦-ஆம்பக்கத் தொடர்ச்சி.

யசோமதியரசன் பின்னொருகால் மிருகவேட்டையைநாடிப் பல வகைப்பட்ட வலைகளையும் பொறிகளையும் கொலைக்கருவிகளையுங் கைக்கொண்டு படைச்சேவகர்கள்பலரும் வேட்டைநாய்கள்பலவும் புடைசூழக் காட்டைநோக்கிப் புறப்பட்டனன். அவன் அவ்வாறு செல்லுங்கால், கிங்கரர்கள் ஒருங்குசூழ நல்லார் பொல்லார் இளைஞர் முதியரெனப் பேதமின்றி எவரையு மொன்றுசேரக்கொன்றொழிக்கக்கிளம்பிய கூற்றுவனேபோலக் காணப்பட்டனன். அவ்வாறு செல்லுகையிற் காட்டின் ஒருபுறத்து விருப்புவெறுப்பின்றி எவ்வுயிருக்கும் உறுதியையேநாடி, அன்புமருளும் நிறைந்து, இருவினைகளையும் கடிந்து, இவ்வுலகநினைவொழிந்து, சுதத்தமுனிவரென்னும் ஜைநமுனிவராம் பெரியவரொருவர் யோகுகொண்டிருக்கக்கண்டு, அங்ஙனம் அவரைக்கண்டது, தான் நாடிச்செல்லும்வேட்டைக்குச் சகுனத்தடையெனநினைந்து மனங்கசந்துசென்றனன். அன்று அவன்கருதியபடி வேட்டைக்குரியவிலங்குகள் ஒன்றுமே கிடைக்கப்பெறாது மனங்குலைந்து, ஆங்கு யோகுகொண்டிருந்தமுனிவர்மீது முனிவுகொண்டு, அவரைக் கவ்விக்கதுவிக் கொல்லுமாறு தன்னுடன் வந்திருந்த ஐஞ்ஞூறு வேட்டைநாய்களையும் ஏவினன். அந்நாய்கள் அவரைநெருங்காது சூரியனைச்சூழவிருக்கும் பரிவேஷம்போல், அவரைச்சுற்றி ஒரு விற்கிடைதூரத்தில் நின்றன. அரசன் அதுகண்டு அடங்காச்சினங்கொண்டு, உருவின வாளுங் கையுமாய்த் தானே அவரதுபக்கத்துச்சென்று, அவரை வெட்டிக்கொல்லுமாறு கையை ஓங்கினன்.

அரசன் அவ்வாறு வாளாயுதத்தைக் கையிலேந்திநிற்கையில், தற்செயலாய் அவ்வழியேவந்துகொண்டிருந்த கலியாணமித்திரனென்ற அரசனதுயிர்த்தோழனுன வணிகர்தலைவன் அந்நிலைமையில் அரசனைக்கண்டு மனநடுங்கி "அரசே! இதென்னை ? இத்தவவரசர் மீது நீ இங்ஙனம் வாளுருவுகின்றனை ! இவர், அரசியலை யோர்துகளௌனவிடுத்துத் துறவுபூண்டு, ஒருயிருக்கும் தீங்குநினையாது அறமே வடிவெடுத்துவந்தாற்போன்று, மலையென அசைவற்ற பொறுமைகொண்டு ஆத்மத்தியானஞ்செய்துகொண்டிருக்கின்றனர். இவரதுதிருவடிகளில், தீர்க்கதண்டம்சமர்ப்பித்து நல்வழிப்படுவதைவிட்டு, இவ்வாறு மனக்கொதிப்புக்கொண்டு இவரைக் கொல்லநினைக்க நினக்கு இவர் என்னபிழைசெய்தனர் ? இவரதுபெருமையைச் சிறிதும் நீ அறிந்திலைபோலும். இவர் ஆகவெனில் எக்காரியமும் ஆகும் ; அழியவெனில் அழியும் ; மழைபெய்கவெனில் மேகம் வந்து மழைபொழியும். ஏகசித்தத்தவராம் இம்முனிவரதுபெருமை இத்தன்மைத்தாம். இவரையடைந்தார் மறுமையிற் பேரின்பம் பெறுவர். இவரையிகழ்ந்தார் கொடியநரகங்களிலாழ்வார். விருப்பு வெறுப்பொன்றுமின்றி எங்கும் அலைந்து திரியும் சரீரநிழலே போன்று, இவரும் எங்கும் ஓடியாடித்திரிகின்றனர். உலகவியலை இவ்வாறுகடந்துநிற்றல் கடவுளதுசெயலேயாம். இவர் தம்மையிகழ்ந்தாரை முனிவுகொண்டு இடர்செய்து இகழ்விப்பதுமில்லை. இந்திரர்களேவந்து அடிபணிந்து புகழ்ந்தாராயினும், அதற்கென அவர்களை மகிழ்ந்துபோற்றி மகிழ்விப்பதுமில்லை. யார் என்னதீங்குகள் தமக்குச்செய்யினும், அவையெல்லாம் தம் வினைப்பயனென அவர் நினைந்து, அத்தீமைசெய்தாரிடத்து வெகுளாது தம்வினைகளின் மேலேயே நினைவினைநிறுத்தி, எவரிடத்தும் நமர் பிறரென்ற பேதம் பாராட்டா தொழுகுபவர். மேலும், எவ்வுயிரும் தம்முயிருக்குநேரெனக்கருதி, பொறுமையொழிந்து அருள்சுரந்து, இவ்வையகத்துயிர்களுக்கெல்லாம் இதமேநாடி, இன்னுசெய்தார்க்கும் இனியவே செய்து உயிர்வளர்க்குஞ்செவ்வியையே விரதமாகப்பூண்டவர். நீ இவரைப்பணிந்து உனது தீவினைகளைக்கடந்து உய்வாயாக" வென்றனன்.

இவ்வாறு தனக்கிதங்கூறியவணிகனதுமொழியை அரசன் இகழாது மதித்துக் கோபந்தணிந்து ஓங்கினகையைத் தாழவிட்டு வணிகனைநோக்கி "நண்பனே! இங்ஙனம் அடிபணிந்துபோற்றுமாறு நீ யெனக்குக்கூறிய இவர் யாவர்? எக்குலத்தவர்? இவர் மாசுபடிந்த கருமேனியர்; இவரது உடம்பு தண்ணீர்கண்டு பல்லாண்டுகளாயின போலும். இவரை யான் எவ்வாறுவணங்கலாகும்?" எனவே, வணிகன், "அரசே! இவர் நீதிவழுவாது உலகாண்ட கலிங்கநாட்டரசர். காங்கர்குலத்திற்பிறந்தவர்; இளமையும் எழிலும் போகமும் பொருளுமாதியயாவும், மேகமும் மின்னலும் வானிடுவில்லும்போலத் தோன்றியழியுமென நன்குணர்ந்து, அவைகளை நிலையெனக்கொள்ளாது விட்டொழித்துத் துறவுபூண்டு குறைவிலா மாதவம்பூண்டு எவ்வுயிரிடத்தும் அருள்கொள்ளும் நல்லறவழியில்நின்று யோக மார்க்கத்தாற் பொன்னுலகுசேரக்கருதியவர்; நாடு நகரம் கொடி முடி வீடு பெண்டு ஆடையாபரணங்கள் இவையாவையும் ஒருங்கே கைவிட்டவர்; வானவரும் தானவரும் மன்னவரும்வந் தடிதொழுந் தவப்பெருமைகொண்டவர்; எவ்வுயிரிடத்தும் அன்புபாராட்டிஉறுதி நாடிக் காட்டிலும் நாட்டிலும் மலையிலும் திரிகின்றனர். நிற்க. இவர் சரீரத்தினிடத்து யான் என்ற பாவனையும் எனது என்ற பற்று மொழிந்து, இப்பௌதிகசரீரமுள்ளவரை முத்திபெற லரிதானதுபற்றி அது நன்மைக்கானதென்றநினைப்பு மாறி, உடலின் வெளித்தோற்றத்தில் மகிழ்வுறாது தம் வினைமாசினையே மாசெனக்கருதி யதனைக் களைந்து, ஞானவொளியையே தமக் கணியாகக்கொண்டவர். இவரது பெருமையால், இன்று நீ இக்காட்டிலுள்ளபல்லுயிர்களையுங்கொன்று உன்மேற்சுமத்திக்கொள்ளவிருந்த தாங்கருந் தீவினைச்சுமைகளும் நின்னைச் சாராதொழிந்தன. இந்நாய்களுங்கூட இவரைக்கண்டவளவில் தம் மூர்க்ககுணமொழிந்து உபசாந்தியடைந்துநிற்பதைக் காணின், இவருக்கும் தீங்கிழைக்க மனம்வருமோ?"வெனச் சொல்லி முடித்தனன்.

இங்ஙனம் மித்திரனாகிய கலியாணமித்திரன்சொல்லக்கேட்டதும் அரசன் தரையில்வீழ்ந்து முனிவரதுமலரடிகளில் தண்டனிட்டதுமன்றி அவரைக் கொல்லநினைத்த தன் தீவினைதீருமாறு தன்றலையை யரிந்து அவரதுதிருவடிகளிலிடவுநினைத்தனன். அரசனது உள்ளக் கருத்தினைத் தம் ஞானதிருஷ்டியினால் தெரிந்துகொண்டமுனிவர்,

அவனைக் கைகொண்டெடுத்து "அரசே! நீ இப்பொழுது உன்மனத்திற்கொண்டகருத்தினைக் கைவிடுவையாக. நின்னுயிரினைவளர்த்துப் பிறவுயிர்களைக்காக்கக் கடமைப்பட்ட நீ நின்னுயிரினையேமாய்க்கக் கருதுவையாயின், பிறவுயிர்களிடத்து உனக்குள்ள அன்பு எவ்வாறாகும்?" எனவே, தன் உள்ளக்கருத்தினைத் தான்சொல்லாமலே அவர் அறிந்துகொண்டதனைக்கண்டு அரசன் வியப்படைந்து, பின்னும் பன்முறை அவரைப் பணிந்தெழுந்து தன்குலத்தவராம் முன்னோர்களடைந்தகதிகளைத் தானறியுமாறு மொழிந்தருளவேண்டுமென வேண்டினன். முனிவர் அவதிஜ்ஞானத்தால்* அவரது கதிகளைக் கண்டறிந்து, அரசனறியுமாறு அவனுக்குச் சொல்லத் தொடங்கினர்.

"வேந்தே! நின்பாட்டனும் அசோகராஜன் தன் னல்லறப்பயனால் பிரஹ்மோத்தரகல்பம் எனப்படும் ஆறுவதுதுறக்கத்தில் இன்புற்றுவாழ்கின்றனன். ஆங்கடைந்தார்களின் நீண்ட வாழ்நாணிறைவாம் பத்துக்கடல்களளவுகாலமும் அவன் ஆங்கு வாழ்வன்.†

---

* "𑌮𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌵𑌧𑌿𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍॥" தத்துவார்த்த சாஸ்திரம், 1-அத். 9-சூ. மதிஜ்ஞானம், சுருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம், மனப்பரியயஜ்ஞானம், கேவலஜ்ஞானம் என ஞானம் ஐந்துவகையாகும். பஞ்சேந்திரியங்களின்மூலமாக மனங்கொண்டு அறியப்படுவது மதிஜ்ஞானம். அவ்வாறு அறிந்தவைகளை நன்றாக ஆலோசித்துப்பார்த்துத் தீர்மானித்தல் சுருதஜ்ஞானம். குறிப்பிட்ட இடம் காலம் விஷயங்கள் இவைகளைப்பற்றியதாகவுள்ள அறிவு அவதிஜ்ஞானம்; இது பஞ்சேந்திரியங்களின் உதவியால் ஆகாதது. பிறருடையமனத்துள்ளவிஷயங்களையெல்லாம் அவர் சொல்லாமல் அறிந்துகொள்ளல் மனப்பரியயஜ்ஞானம். நிறைவுற்ற அறிவு கேவலஜ்ஞானம்.

† "𑌸𑍌𑌧𑌰𑍍𑌮𑍈𑌶𑌾𑌨𑌕𑌲𑍍𑌪𑌯𑍋𑌃 ॥௧௧॥
𑌸𑌾𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍋𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌕𑌲𑍍𑌪𑍇 𑌦𑍍𑌵𑌾𑌵𑍇𑌵 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌾𑌃 ॥௧௨॥
𑌲𑌾𑌨𑍍𑌤𑌵𑌕𑌾𑌪𑌿𑌷𑍍𑌟𑌕𑌲𑍍𑌪𑌯𑍋𑌶𑍍𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 ।
𑌤𑌤𑌃 𑌶𑍁𑌕𑍍𑌰𑌮𑌹𑌾𑌶𑍁𑌕𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍋𑌃 𑌷𑍋𑌡𑌶𑍋𑌦𑌿𑌤𑌾𑌃 ॥ ௧௩॥
𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶 𑌶𑌤𑌾𑌰𑍇 𑌚 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍇 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃
𑌆𑌨𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌤𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌾𑌃 ॥ ௧௪ ॥

"நின்ருயாகிய அமிருதமதி களவொழுக்கத்தானும் கணவனையும் அவன்ருயையும் வஞ்சித்து. நஞ்சிட்டுக்கொன்றபாவத்தானும் குட்டநோயுற்று உடல்குறுகிக் குறைந்து உயிரிழந்து கொடியதோர்நரகில் வீழ்ந்தனள்: † நரகவட்டங்கள், (1) ரத்நப்பிரபை (ஒளிவட்டம்) (2) சர்க்கராப்பிரபை (பரல்வட்டம்) (3) வாலுகாப்பிரபை (மணல்வட்டம்) (4) பங்கப்பிரபை (சேற்றுவட்டம்) (5) தூமப்பிரபை (புகைவட்டம்) (6) தமப்பிரபை (இருள்வட்டம்) (7) மஹாதமப்பிரபை

ஆரணேऽச்யுதகல்பே ச த்வாவிம்ஶதிரம்போதய: ।
ஸமேகைகைகம் நவக்ரைவேயேஷ்வநுதிஶ த்ரயஸ்த்ரிம்ஶத்ஸாகரா: ॥" ௩௫ ॥

தத்த்வார்த்தஸாரே । ௧௮. ஸர்க்க.

இ-ள். ஸௌதர்மேசானகற்பங்களில் ஆங்கடைந்தார் நீண்டவாழ்நாணிறைவு 2 கடலும்,ஸானத்குமார மாகேந்திரகற்பங்களில் ஏழுகடலும்,பிரஹ்மபிரஹ்மோத்தரகற்பங்களிற் பத்துக்கடலும், லாந்தவகாபிஷ்டகற்பங்களிற் பதினான்குகடல்களும், சுக்கிரமஹாசுக்கிரகற்பங்களிற் பதினாறுகடல்களும், சதாரஸஹஸ்ரார கற்பங்களிற் பதினெட்டுக்கடல்களும், ஆனதப்பிராணதகற்பங்களில் இருபது கடல்களும், ஆரணச்சுதகற்பங்களில் இருபத்திரண்டுகடல்களும், நவக்கிரைவேயங்களில் முறையே ஒவ்வொருகடல்வீதம் அதிகப்பட்டு மேலேயுள்ள ஒன்பதாவதுகிரைவேயகத்தில் முப்பத்தொருகடல்களும், நவானுதிசைகளில் முப்பத்திரண்டுகடல்களும், விஜய-வைஜயந்த-அபராஜிதங்களிலும் ஸர்வார்த்தஸித்தியிலும் முப்பத்துமூன்றுகடல்களுமாம். (கடல்-சமுத்திரம், அஃதொருகால அளவு.)

"இரண்டுமேழுமீரைந்துமீரேழுமா
இரண்டின்மேற்சென்றிருபத்திரண்டெய்தத்
திரண்டவற்றின்மேலொன்றுசென்றுயுக
முரண்டெழுங்கடல்முப்பத்துமூன்றுமேல்" மேருமந்தரபுராணம் 498.

"இரண்டாகுமுதல்வர்கட்கேழீரைந்தீரேழாய்த்
திரண்டிரண்டாய்மூவுலகத்தொழிந்தவர்சேர்பிரண்டிரண்டா
யரண்டகவந்தேறிப்பின்னாரணவச்சுதருலகின்
மருண்டாயமணிமுன்னீர்பதினொன்றற்கிருமடியே" 223.

ஆங்கவர்மேலமரசர்மும்மூவர்க்கொரோவொன்று
யோங்கினர்மேலொன்பதின்மர்க்கொன்றொன்றுயவர்மேலார்
பாங்கினுறப்பெருகுவனபதினைந்திற்கிருமடிமேல்
வாங்கொலிநீரொருமூன்றுவாழ்வெண்பமணிமுடியாய்" சூளாமணி, துறவுச்சருக்கம் 224.

† "நாரகம் ஸப்தமா ஸப்தப்ருத்வீஹேஷு ஹிஸ்ருதே ।
ஆயிகாயிகஸம்க்லேஶப்ராணாயாஸவிஶேஷித: ॥
ரத்நாத்ப்ரா நாமதீயா ஶர்க்கராப்ரா ।
ஸிகதாப்ரா ஹா தந்யா ப்ராப்ரா ஹா ததா ॥

(பேரிருள்வட்டம்) என ஏழாம். இவ்வேழும் முறையே ஒன்றன்கீழொன்றாகவுள்ளன. ஆங்கடைந்தார்படுந் துயரங்களும் அவரது வாழ்நாணிறைவும் சரீர அளவும் முறையே கீழ்க்கீழுள்ள நரகவட்டங்களில் மிகைப்படும். அமிருதமதி ஐந்தாவதுநரகவட்டமாகிய புகைநரகில் வீழ்ந்தனள். ‡ அந்நரகு இரண்டுபங்கு இடம் சொல்லற்கரிய கடும்வெப்பமும், ஒருபங்கு இடம் கடுஞ்சீதமும் கொண்டதாகும்.

ரத்னப்ரபா ததோ ஜ்ஞேயா ஶர்கரா வாலுகாப்ரபா ।
மஹாதம:ப்ரபா சேதி ஸப்தானாம் நாமானி க்ரமாத் ॥ ”

இ - ள். நரகவட்டங்கள் ரத்தினப்பிரபை, சர்க்கராப்பிரபை, வாலுகாப்பிரபை, பங்கப்பிரபை, தூமப்பிரபை, தமப்பிரபை, மஹாதமப்பிரபை என எழுவகைப்படும். அவை ஒன்றன்கீழொன்றாக இருக்கின்றன. கீழ்க்கீழுள்ள நரகவட்டங்களில் ஆங்கடைந்தார்படுந்துன்பங்களும் அவர்களது சரீரபரிமாணமும் நீண்டவாழ்நாணிறைவும் மிகைப்படும்.

“இருளினிருளுமிருளும்புகையு
மருளிலளறுமணலும்பரலு
மருளின்மணியுமெனவிப்பெயர
பொருளினரகங்கள்போதரக்கொண்ணீ” சூளாமணி, துறவுச்சருக்கம் 85.

(இச்செய்யுளில் இந்நரகவட்டங்கள் கீழிருந்து மேன்மேலுள்ளவரிசையிற்கூறப்பட்டுள்ளன.)

“முல்லைமுகைமலர்த்தாரோய்முதற்புரை
யல்லலெனப்பலவாயிரகோடிக
ளெல்லையிறுன்பமிவற்றினிருமடி
புல்லினர்கீழ்க்கீழ்புரைபுரைதோறும்” 104.

“விளிவிறுயரொடுமேற்பொங்கிவீழு
மளவுமவர்கண்முறையும்பிறவு
மளவிலகீழ்க்கீழிரட்டியறைந்தே
னுளரொளிஞானமஃதொன்றுமொழித்தே”
சூளாமணி, துறவுச்சருக்கம் 105.

‡ “பஞ்சம்யாமுபரி, உஷ்ணவேதநா நரகா: லக்ஷத்வயம், ஶீதவேதநா நாரகா ஏகலக்ஷம்।” தத்துவார்த்தசாஸ்திரம் மூன்றுவது அத்தியாயம் 3-வது சூத்திரவியாக்கியானம்.—ராஜவார்த்திகம்.

இ-ள். ஐந்தாவதுநரகவட்டத்துமேற்புறத்து, கொடியவெப்பம்மிகுந்த நரகங்கள் இரண்டிலக்ஷங்கள்; கீழ்ப்புறத்து, கொடியதட்பம்மிகுந்த நரகங்கள் ஒருலட்சம்.

மேருகிரியைக்கொணர்ந்து அவ்வெப்பத்திடின், அஃது வெருசடுதியில் நீரெனவுருகியோடும். அவ்வாறு உருகிய அஃது அந்நரகில் தட்பமிகுந்தவிடத்துச்சேரின் அடுத்தநிமிஷத்தில் முன்போல வலித்துவிடும். அவ்விதநரகத்துள் அமிருதமதி வீழ்ந் துருகி இறுகித் துன்புற்றனள். தஞ்சமென்றவாய்க்கு அஞ்சேல் என முன்வந்துதவ யாருமின்றி அற்றனுமின்றித் தவிக்கின்றனள். ஆழ்ந்த அந்நரகில் அவள் வீழவே தீவினையுடையாராகிய நரகர் ஓடிச்சூழ்ந்து அவளைக் கால்களால்துகைத்தனர்; தீயிலிட்டுச் சுட்டெரித்தனர்; புண்பெருகத் தடிகளாற்புடைத்தனர்; வாள்களால்வெட்டிப்பிளந்தனர்; ஐயோ பாவம், என்செய்வாள்! தாந்தாஞ்செய்ததீவினைகள்வந்துசீறுங்கால், அவரிடத்துச் சீறுதாருமுளரோ? நிரயபாலர்களாகிய இந்திரர்கள், செந்தழலில்வெந்துருகுதலுற்ற செப்புப்பாளங்களைப் புலாலருந்திய வாயிற் றிணித்தனர். ஜாரனுகிய அஷ்டபங்கனைப்புணர்ந்த தீவினைக் கொடுமையாலே, அழலிலே உருகவெந்த செப்புப்பாவையைக்காட்டி, இதுவு முனக்குத் தழுவ இனிதேயாமெனக்கூறி, அதனையணையுமாறு அவளை யதனருகிற்றள்ளவே, அவளும் வகையின்றி யதனைத்தழுவி உடல்முழுதும் பொரிந்து பொடியாயினள். உண்டஅளவில் நாமுழுதும் அழுகிவீழும் நஞ்சுணவையுண்டு, கோவென்றலறி நாவுருகி அலமந்தனள். நஞ்சுணவினும் இறந்திலள். அந்தோ! தீவினைப்பயன்களாம் துன்பங்கள்விளைநிலமாகியநாகத்தில், இனிதெனநினைக்கலாகும் மரணமும் அரிதாமன்றோ? நீ முன் நின்னினத்தார்களின்தசைகளை விலக்காது விரும்பித்தின்றனையாதலின், அவைகளினும் உனதுதசை தின்ன உனக்கு இனிப்பாகவிருக்குமெனச்சொல்லி, அவளை உறுப்புறுப்பாக வரிந்தரிந்து ஊட்டி யொறுப்பர். நிற்க, எள்ளாட்டுஞ்செக்கிலிட்டு ஆட்டுவர்; உலைப்பெருந்தீயிலிட்டு உருக்குவர்; கொலைக்கழுவில் இடுவர். இவ்வாறு நிரயபாலர்கள்செய்யும்வருத்தத்தால் அவள்படுந் துயரங்களையெடுத்துரைத்தல் அரிதினுமரிதேயாம். இதுவும் கிடக்க,

---

"ஹிமவந்மாத்ரஸ்தாம்ரபிண்ட உஷ்ணநரகேஷு யதி நிக்ஷிப்யேத,
க்ஷிப்ரமேவ விலீயேத । விலீநம் தத் ஸீதநரகேஷு யதி நிக்ஷிப்யேத, க்ஷிப்ரமேவ ஸம்ஹதம் ஸ்யாத் ।"

ராஜவார்த்திகம்.

இ-ள். இமயமலையன்ன பென்னம்பெரிய தாமிரமலையொன்றை வெப்பம் நிறைந்த நரகங்களிலிடின், சடுதியில் அது நீரென உருகியோடும். அவ்வாறு உருகியோடுமதனைத் தட்பம்மிகுந்த நரகங்களிலிடின், இமைப்பொழுதினில் முன்போலக் கட்டித்துவிடும்.

அமிருதமதி, *நூற்றிருபத்தைந்துவில்லுயரமுள்ள பெருந்தேகத்தோடு ஓய்வின்றி எப்பொழுதும் நெடுந்தூரம்பொங்கியெழுந்து கீழுள்ள கற்பாறைகளில்வீழ்ந்தவண்ணமாகவே யிருக்கின்றனள். இங்ஙனம் கீழ்வீழ்ந்து உடல்சிதறுவாளாயினும், சிதறுண்ட பாதரஸமேபோன்று, அவளது அழிந்தவுடம்பு மேலும் வடிவுகூடிவிடுகின்றது. இவ்விதத்துன்பங்களை நுகர்ந்துகொண்டு, அந்நரகில் நீண்ட வாழ்நாணிறைவாகிய †பதினேழுகடற்காலங்கழியுமளவும் அவள் ஆங்குக் கிடப்பாளாவள்.

---

* "[illegible] ।
[illegible] ॥ கஎ
[illegible] ।
[illegible] ॥" கஅ. ॥
[illegible]

இ-ள். முதலாவதுநரகவட்டமடைந்தாரின் சரீரபரிமாணம் 7 வில், 3-முழம், 6-அங்குலமுயரமாம். இரண்டாவதுமுதலாகவுள்ளவட்டங்களில் இருமடங்குவீதம்பெருகி ஏழாவதுநரகத்து 500-வில்லளவு உயரமுளதாம். (அங்குலம் இருபத்துநான்கு, முழம். முழம் நான்கு, வில்.)

"எழுவின்முழமூன் றறுவிரலென்ப
வழுவின்முதலதன்கீழ்ப்புரைவாழ்வார்
ஒழிவிலபொங்குவரோசனையேழ்மேன்
முழுவிலைஞ்ஞூற்றெருமுக்காவதமே" சூளாமணி, துறவுச்சருக்கம் 107.

†"[illegible] ।
[illegible] ॥ உ௦ ॥
[illegible] ।
[illegible] ॥ உக ॥
[illegible] ।
[illegible] "॥ உஉ॥
[illegible]

இ - ள். முதலாவதுநரகவட்டத்தையடைந்தார்களின் நீண்டவாழ்நாணிறைவு 1 கடல்; இரண்டாவதுநரகவட்டத்தையடைந்தாருக்கு 3 கடல்; மூன்றுவதுநரகவட்டமடைந்தாருக்கு 7 கடல்; நான்காவதுநரகவட்டத்தாருக்கு 10 கடல்; ஐந்தாவதுநரகவட்டமடைந்தாருக்கு 17 கடல்; ஆறுவதுநரகவட்டமடைந்தாருக்கு 22 கடல்; ஏழாவதுநரகவட்டமடைந்தாருக்கு 33 கடல்; முதலாவதுநரக

"நின்தந்தையாகிய் யசோதரமன்னன், மாக்கோழியைவதை செய்தபாவத்தால் மயிலாய் முட்பன்றியாய் மீனாய்ப் பின்னிரு முறை தகருமாய் ஆறுவதுஜன்மத்திற் சேவலாய்ப்பிறந்தனன். அது போலவே, அவனது தாயாகிய சந்திரமதி, நாயாய்க் கரும்பாம்பாய் முதலையாய்ப் பெண்ணாடாய் எருமையாய் ஆறுவதுபிறப்பிற் சேவலாய்ப்பிறந்தனள். அவரிருவரும், அப்பிறப்பிற் சண்டகருமனாற் கூட்டிலடைபட்டுநிற்க, அகம்பனமுனிவர்கூறிய நல்லறப்பெருமையைக் கேட்டுணர்ந்து, நின்மக்களாம் அபயருசியும் அபயமதியுமாகி வளர்கின்றனர். இது நம்மவர்களின் பவவினைகளும் அவ்வினைப் பயன்களுமாம்" என்றனர்.

இவ்வாறு காரியகாரணபாவங்களுடன் முனிவர்மொழிந்தருளியவற்றையெல்லாம் ஒவ்வொன்றாய் நினைந்துநினைந்து, அரசன் விதிர்விதிர்த்து மனமுடைந்து மருண்டனன். அபயருசியும் அபயமதியும் தம்முற்பவங்களை முனிவர்கூறியசமயத்து ஆங்குச்சென்று கேட்டிருந்தாராதலின், அதுகாறும் மறதியிலிருந்த அவ்விஷயங்கள் யாவும் உடனே அவர்களதுநினைப்புக்குவந்தன. அப்பொழுது அவர்களுக்குண்டான மனக்கவலைகளை அவர்களேயறிவார்களல்லாது யார் அறிவார்? தந்தையும் அவனது தாயுமாகவிருந்து, இப்பொழுது தன்செல்வப்புதல்வனும் புதல்வியுமாகவந்துபிறந்துள்ள அபயருசியும் அபயமதியும் தம் முற்பிறப்புக்களையோர்ந்து மனமுளைந்து தேம்பித்தேம்பிப் புலம்பக்கண்ட அரசன் வெங்கனலிலிட்ட வெண்ணெய் போலிரங்கி யுருகினன். பின்னும், யசோமதியரசன் "என்தந்தையும்

வட்டத்துக்குக் குறைந்தது பத்தாயிரமாண்டளவாகும். மற்றையநரகவட்டங்களிற் குறைந்தகால அளவு, முந்தியநரகங்களினது நீண்டவாழ்நாணிறைவேயாம்:

"ஆண்டுச்சிறுமைபதினாயிரமுள
நீண்டவர்வாழ்நாணிறைவுகடலெல்லை
யீண்டிதன்கீழ்க்கீழ்ப்பெருகிவருமெங்கும்
வேண்டிற்சிறுமைதம்மேலோர்நிறைவே" 108.

"மூன்றுமொரேழுமொழிபஃதும்பத்தினோ
டேன்றநல்லேழுமிருபத்திரண்டுமென்
றூன்றவலைகடன்முப்பத்துமூன்றுமென்
றூன்றினகீழ்க்கீழுயர்ந்தனவாழ்நாள். சூளாமணி. துறவுச்சருக்கம். 109.

தந்தையின் தாயும் இறந்திறந்து பிறந்தபிறவிகள்தோறும் அவர்களுக்குச் சொல்லரும்பெருந்துன்பங்கள்புரிந்து யான் என்றலையிற் சுமத்திக்கொண்ட தீவினைகள் தீருமாறு என்செய்வேன்? நிற்க; நாள் தோறும் கணக்கில்லாதவுயிர்களைப் படுமோசஞ்செய்து வதைத்த பாவங்கள்தீர, நரகத்துன்பங்களை யனுபவித்தலல்லது, அவைகளினின்றுந்தப்ப வழியொன்றும் கண்டிலேனே ; என்செய்வேன் ? அன்றியும், பொருளும் போகமுமே பெரிதெனக்கொண்டு, பிராணிகளிடத்து அருளு மன்பு மின்றி, அவைகளுக் கழிவுசெய்து, பாவியேன் அவைகளின்பாவங்களைக் கட்டிக்கொண்டேனே. இதற்குத்தான் என்செய்வேன் ? இம்மட்டோடும்நில்லாது, அருள்வடிவுற்ற இவ்வடிகட்கும் முன்பின் சிறிதும்யோசியாது தீங்கிழைக்கநினைந்தேனே. சிறியேன் இப்பாவத்தினின்றும் எவ்வாறு உய்வேன் ? மாக்கோழியைக் கொலைசெய்தபாவத்தான் இவருற்றதீமை இவ்வாறுமாயின், ஓயாது உயிர்க்கொலைபுரிந்த அடியேனுக்கு நுந்திருவடிகளேயல்லது வேறுசரண் ஒன்றுங்கண்டிலேன். இப்பாவங்களினின்றும் யான் தப்பும்வழி யாது ? அருள்புரிந்து மொழிந்தருளவேண்டு"மெனக் கெஞ்சிக்கேட்டனன்.

முனிவர் அரசனைநோக்கி, "நீ அச்சமொழிக. மெய்யறிவில்லாதார் அறிவிலராயகாலத்துச்செய்த தீவினைகள்யாவும், மெய்யறிவு ஊற விலகிநிற்கும். அருள்புரிமனத்தராகி உயிர்களுக்கு அபயநல்கிப் பொருளாசை கொலை களவு காமம் பொய்யாகிய தீவினைகளையெல்லாமகற்றி இறைவனதறத்தைப்பற்றின் இன்பமல்லால் துன்பம் வருவதுண்டோ ? இல்லை இல்லை" யென்றனர். என்றலும், அரசன் எவ்வுயிரும் தன்னுயிருக்குநேரெனக்கொண்டு, பிராணிஹிம்சை முதலிய எவ்விதத்தீமைகளையும் அகற்றித் திருவறமருவினன். கடந்தவரைச் சரணடைந்தார் கடுவினைகளைக்கடப்பரன்றோ ?

யசோமதியரசன், தன்மக்களாம் அபயருசியையும் அபயமதியையும் அருகிலழைத்து அவாதுமுற்பவங்களில் தான் அறிவின்மை காரணமாக அருள்குன்றி அவர்களை வாட்டிவதைத்துச் செய்த சிறுமைகளையெல்லாம் பொறுத்தல்வேண்டுமென இரங்கிக்கேட்டனன். தன் னுயிர்ப்பாங்கனும் கலியாணமித்திரனைநோக்கி, "தோழனே! தீயவழிகளிலேயேபழக்கப்பட்டு அவ்வழியிலேயே முன் சென்ற

என்னை அரும்பாடுபெரும்பாடுபட்டு அவ்வழியினின்றுதிருப்பி நல்
வழியிற்கொணர்ந்துசேர்த்தநீயும் எனக்கு இக்கருணைக்கடலாகிய
அடிகளுக்கொப்பாவாய்” என மனமுவந்தவந்தனஞ் செலுத்தினன்.
மேன்மேலும் பலவகைப்பட்ட இடர்களுக்கிடனும் ராஜயபாரமென்
னும்பெரும்பாரத்தை மூத்தமகனும் அபயருசியின்பால்விடுத்து அவ
னுக்கு மகுடஞ்சூட்டி, சுதத்தமுனிவரது திருவடிகளைக்கைப்பற்றி,
அவரிடத்து ஜிநாகமங்களைக்கேட்டுணர்ந்து, தீக்ஷைகொண்டு துறவு
பூண்டனன். கலியாணமித்திரனும்வணிகனும் வேறுபலரும் உடன்
சென்று அவ்வாறே துறவறம்பூண்டனர். அபயருசி, தன்தந்தையின்
துறவுமுந்தத் தான் அரசியலைத்தாங்கத் தற்சமயம் உடன்பட்டானே
யன்றி, அளப்பருந்துன்பங்களுக்கிடனும் இவ்வுலகவின்பங்களிற்
சிறிதும் ஆசைகொண்டனனல்லன். ஆகவே, தன் தம்பியாம் யசோ
தரனுக்குப்பட்டஞ்சூட்டி ராஜ்யப்பொறுப்பை அவன்பாலாக்கித்
தன்தங்கை அபயமதியுந் தானுமாய்த் தவவனம்புகுந்து சுதத்தமுனி
வரைவணங்கி வாழ்த்தி அவரைப்பார்த்து, “வினைகளையும் வினைப்
பயன்களையும்அஞ்சித் தஞ்சமென்றடைந்தார்களுக் கஞ்சன்மின் எனக்
கைகொடுத்துத் தவவரசருளவுடன்பட்டபெரியோய்! வருவினையூற்
றுக்களையெல்லாம் செறித்த சீரியோய்! நாங்களிருவரும் ஜிநவரனது
சரண்களையே சரண்கொண்டு; மனங்கொள அருந்தவம்புரிய எண்ணி
வந்துளோம். இது மெய்யேயாகும். எங்களுக்கு உபதேசம்புரியத்
தாங்கள் நன்மனங்கொளல்வேண்டும்” என்றனன். எனவே, முனிவர்
“இளைஞர்காள்! இதுபொழுது நீங்கள் (a)சையமாசையமத்திற்கேற்ற
வந்நிலைமையைத்தழுவி, அதனிற்பிறழாதுநின்று அறநூல்களிற்
சொற்றவாறு தவவழியிற் படிப்படியாய்முயன்று முன்சென்று, தக்க
திராணிவந்தவளவில் துறவறம்பூண்டு அருந்தவமமர்ந்துசெய்மின்”
என்றுமொழிந்தனர். அவர்களும்(b)பதினொன்றுவதுசிராவகநிலையைத்
தழுவித் தம்மாற்றலுக்கேற்றவாறு அவ்வழியில் ஒழுகிநின்றனர்.
அருங்குணங்கள்யாவுமமையப்பெற்ற அச் சுதத்தமுனிவர் ரத்நத்ரய

(a) “संयमासंयमः, विरताविरतपरिणामः।” சையமாசைய
மம் - துறவறத்தைத்தொட்டுத்தொடாதுநிற்றல்.

(b) “மனைதுறந்துமாதவர்தாளடைந்துநோற்று
வினையறுப்பானுக்கிட்டனும்” அருங்கலச்செப்பு—171.

ஸம்பந்நர்களாம் தம்மையொத்த அருந்தவர்பலருஞ்சூழ இந்நகரப் புறத்து ஒருசோலையின்கண்வந் தமர்ந்தனர், வந்தவந்நாள், அம் முனியரசர் தம்முடன்வந்தாரோடு உபவாஸமிருக்கக்கருதி யசோ மதியரசன்மக்களாம் அபயருசியையும் அபயமதியையும் தம்பக்கத் தழைத்து "இளம்பிராயமுடையநீங்கள் பட்டினிதாங்கமாட்டீர்கள், இந்நகரத்துத்தெருக்கள்வழியே (c)சரியைபோமின்" எனக் கட்டளை யிடவே, அவ்விருவரும் முனிவரை இறைஞ்சி அவரதுகட்டளைப்படி இந்நகரத்துள்வந்தனர். மாரிதத்தவரசனே! நாங்கள் அவர்களே யெனவறிவையாக; இது எம்முடையதும் எம்மைச்சேர்ந்தவர்களது மாகிய பிறவிமாலை. ஆயுங்கால், இங்ஙனமாகும்வினைகள் பின்னாட்க ளில் தொடர்ந்துவந்து துன்புறுத்துமுறையும், காமம் வெகுளி இவை களுக்கு இடங்கொடுக்கின், அவைகளினால்விளையுங் கொடுமைகளும் இத்தகையனவாகும். இறைவனதறத்தைக் கைக்கொண்டொழுகின், அதன்பெருமையும் யாம்கூறியவாறு இங்ஙனமாகும். அரசே! கோழி யின்வடிவாக மாவினாற்செய்த வோரியந்திரத்தை யாம் கொலைபுரிந்த பாவம், எம்பிறவிகள்தோறும் எம்மையொட்டிவந்து வருத்துகின்ற தாமாயின், நீபுரியும் இவ்வுயிர்க்கொலை எந்நாளும் தீராதகொலையாக உன்னைச்சூழ்ந்துநிற்கும். நீ மயக்கவிருண்மேவிட்டு எத்துணையோ வுயிர்களைக் கொலைசெய்வதனால் உனக்குவருந்துன்பங்கள் எத் தன்மைத்தாகுமோவென மனமுளைந்து இரக்கங்கொள்கின்றனம்" என்றனன்.

[இதனையெல்லாம் விடாதுகேட்டிருந்த சண்டமாரியம்மன், நல் லுணர்வுகொண்டு, ஜீவவதையில் மனநடுங்கி ஒழிவடைந்து, எவருங் காண எதிரில்தோன்றி அபயருசியையும் அபயமதியையும் வணங்கி நின்று, அன்றுதொட் டெவரும் தன்னை நன்மலர்களாலும் கனிவகை களாலுமல்லது உயிர்வதைசெய்து பலிகொடுத்துப் பூஜைசெய்வாரா யின் அவர்களதுகுடும்பம் அடியோடுமாண்டொழியுமென எவரும் கேட்கக்கூறிவிட்டு மறைந்தனள். ஆங்கிருந்தார்யாவரும் அதிசயப் பட்டனர்.]

(c) சரியைபோமின் - பிக்ஷைக்குச்செல்லுங்கள். சர்யா- சரியை; வீடு தோறுநுழையாது தெருவினூடேசென்று பிக்ஷயென்றுசத்தஞ்செய்ய அதனைக்கேட்டு இருந்தவிடந்தேடியளிப்பாரிடமிருந்துமட்டும்வாங்கியுண்ணும் பிக்ஷை. "சர்யா ஈர்யா [illegible] ।" அமரகோசம்.

[] இவ்வடையாளங்களுக் கிடையிலுள்ளது வடமொழிக்காவியத்தின்மட்டு முள்ளது.

இதனையெல்லாம் அவ்விடத்துநின்று கண்டுங்கேட்டு மிருந்த மாரிதத்தவரசன் அபயருசியைப்பார்த்துச் சொல்வானாயினன். "ஐய! நீ கனிந்துகூறிய நற்போதனையினால், கொலைப்பாவங்களினாற் கோடிக் கணக்கில்வந்துறும் கொடியதுன்பங்களினின்றும் நான் இதுபொழுது நீங்கினேன். யசோமதியரசனது குமாரனே! நின் புகழ்மொழியைப் புணையாகக்கொண்டு இதுபொழுதே யான் அருந்தவமெனும் பெரிய கடலில் இறங்கிக் குளிக்கத் துணிந்துளேன். இது நிச்சயமேயாம்." என்றனன். மனைவிமக்கள் சுற்றத்தாராகிய எவரும் சூழவிருக்கும் பொருள்யாவும், தன்னைச்சூழ்ந்து பற்றியெரியும் நெருப்புத்திரள்களுக் கொப்ப, முத்திபெறத் தடையாய்நின்று பிறவிச்சக்கரத்திற் சுழன்றழியக்காரணமாகுமெனப் பெரிது மஞ்சி, பற்றுக்களையெல்லா மறுத்து, அரசியலைத் தன்மகன் புஷ்பதத்தனதுகையிலாக்கி, அபயருசியையும் அபயமதியையும் தொடர்ந்துசென்று, சுதத்தமுனிவரைத் தொழுது துறவறம்பூண்டு முனிவன் ஆயினன். பிறகு சுதத்தாசாரியரிடத்து நெடுநாள் நூற்பொருள்யாவும் கேட்டுணர்ந்து, வெந்துயர்களுக்கிடனும் தீவினைகளெல்லாம் தன்னைவிட்டொழியுமாறு மாதவத்தினை முறையினில் முடிவுறச்செய்துமுடித்து, யாவரு மதிசயமுற உடம்பினை ஆண்டு விட்டொழித்து, வானுலகின்கண், போகமுகரும் லோகங்களுக் கிடையனவாகவுள்ள சனத்குமாரகற்பங்களெனப்படும் மூன்றாவது துறக்கப்புரையிற்சென்று தேவனாகி, ஆங்குள்ளதேவ மாதர்களுடன் இன்புற்றுவாழ்ந்தனன்.

அபயருசியும் அபயமதியும், இவ்வுலகின்கண் தம்முயிர்வாழ்வு முடிவுபெறக் காலம்நெருங்கியதனைச் சுதத்தமுனிவர்சொல்லத்தெரிந்து, சொற்றநற்குணங்கள்யாவும் அமையப்பெற்று, யோகவழியாற் சரீரத்தினை ஆங்குத் தரையிலிட்டு, மேலுலகத்தி லிரண்டாவதுதுறக்கமாகிய ஈசானகற்பத்திற்சேர்ந்து இமையவராயினர். ஆங்குத் தேவலோகத்துப்பெண்கள் காதல்மேலிட்டு முறுவல்கொண்டுநோக்கச் சுற்றுமுற்றும் ஓர் ஒசனைதூரம் நறுமணமும் இளஞ்சூரியனையொத்துத் திகழொளியும் வீசும் திவ்யதேகத்தோடு அச்சொர்க்கத்திற் சென்று, முற்பிறப்புக்களில்நிகழ்ந்தனவாம் சங்கதிகளையெல்லாம் நினைவுகொண்டு இறைவனதறத்தினில் மாறாதமனத்தினராய், அச்சொர்க்கத்து நீண்ட ஆயுட்பரிமாணமாகிய கடல்களளவுகாலமெல்லாம் இணையிலாவின்பத்தினை இடையறாதுநுகர்ந்து மகிழ்வுற்று வாழ்கின்றனர்.

தொடரும்.

டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரி.

திருப்பெருந்துறையென்பது தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலே*

சென்ற புரட்டாசிமாதத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் "மாணிக்கவாசகர்கால ஆராய்ச்சி" என்ற தலைப்பின்கீழ் மகா-ா-ா-ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் திருப்பெருந்துறைத்தலம் மலைநாடாகிய "மலையாளநாட்டில் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். இவ்வுரை உண்மைக்குமாறுபாடுள்ளதென்று தோன்றி நான் எனக்குத்தெரிந்ததை எழுதலானேன்.

I. (1) இவ்வூர் மிழலைநாட்டில் இருந்ததென்று யாவரும் ஒப்புக்கொள்வார்களென்று எண்ணுகிறேன். மாணிக்கவாசகர் எத்திக்கினின்று மதுரைக்குத் திரும்பிவந்தனரோ அத்திக்கினின்று குதிரைகள் வந்தனவாகும். அத்திக்குத்தான் பெருந்துறையுள்ள திக்கு. மிழலைநாட்டுநரிகள் குதிரைகளாகமாற்றப்பட்டு அவை மிழலைநாட்டினின்று மதுரைக்குவந்தன.

"ஒழுக்கந் தருமந் தவந்தான முறவு வாய்மை பொறைமற்றும்
விழுப்ப முள்ள சூத்திரர்வாழ் மிழலை நாட்டு நரியெல்லா
மழைத்துத் தெருட்டி விளையாட லவனி மீது நனிவிளங்கத்
தழைத்த தலத்தை நரிக்குடியென் றின்றுஞ் சொல்வர் சான்றோரே"

என்று தில்லைநம்பி தம்முடைய திருவிளையாடற்புராணத்திற்கூறியிருப்பதைப்பார்க்க. குதிரைகள் மிழலைநாட்டினின்றுவந்தனவாகையால், திருப்பெருந்துறை மிழலைநாட்டிலிருந்தது என்பது சித்தம். மாணிக்கவாசகர் கொச்சிநாட்டுக்குப்போய் அப்பக்கத்திற் குதிரை வாங்குவதாகக்கூறி அவ்விடத்தினின்று மதுரைக்குத் திரும்பிவந்திருந்தாற் கொச்சிநாட்டுநரிகளல்லவோ பரிகளாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். இப்பாக்கியத்தை அந்நாட்டுநரிகள் அடையவில்லையே!

* ஆவுடையார்கோவில் என்பதும் இதுதான். "ஆளுடையார்கோவில்" என்பது, பாஷாவிசாரம்செய்பவர்கள் "சோம்பேறித்தனவிதி" என்றுகூறும் வழியினாற் காலக்கிரமத்தில் "ஆவுடையார்கோவில்" என்று மாறியிருக்கலாம். "ஆவுடையார்" என்பதைப் "பசுவையுடையபதி" அல்லது "ஆளுடைய நாயகன்" என்று கொள்ளலாமா?

(2) இம்மிழலைநாடு எங்கிருந்தது?

1910—11-ஆம் வருஷத்திய சென்னைராஜதானிக்கல்வெட்டு இலாகாவின் "ரிப்போர்ட்டில்" 1910-ஆம் வருஷத்து 47-ஆம் சிலா சாசனமென்று குறித்திருக்கும் கல்வெட்டின்படி இந்நாடு விருதராஜ பயங்கரவளநாட்டின் ஒருபாகம் என்று அறியலாம்.

தேர்க்காட்டூர் என்ற ஊரிலுள்ள பழையவேளார்குடி ஒன்றைச் சேர்ந்த வேளார் ஒருவரது "கானநாட்டுவிருத்தாந்தம்" என்ற கையெழுத்துச்சுவடியின்படியும், மற்றுள்ள பழைய ஏடுகளின்படியும்,

i. தெற்கேயுள்ள பாண்டிநாட்டிற்கும் வடக்கேயுள்ள புனல் *நாட்டிற்கும் இடையிலுள்ள பன்றிநாடு(மற்றிருநாடுகளின் சில பாகங்களுடன்)கோனாடு, கானாடு என இருபெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும்,

ii. கோனாடு சோழவந்தான்வரை பரவியிருந்ததென்றும்,

iii. கானநாடு, தொண்டி காளையார்கோவில்வரை எட்டியிருந்ததென்றும்,

iv. இவற்றின்பிரிவெல்லை புதுக்கோட்டைக்கு நான்குமைலுக்குத்தெற்கேயோடும் வெள்ளாறென்றுகொள்ளலாம் என்றும்,

v. கோனாடு, உறையூர்க்கூற்றம் ஒல்லையூர்க்கூற்றம் † (புதுக்கோட்டைக்குமேற்கிலுள்ள ஒலியமங்கலத்தைக்கொண்டது) உறத்தூர்க்கூற்றம் (இது புதுக்கோட்டைராஜ்யத்தின்வடமேற்குப்பாகத்திலுள்ள பழையகொடும்பாளூரைக்கொண்டது) என மூன்றுகூற்றங்களாகப் பிரிந்திருந்ததென்றும்,

vi. கானநாடு ஏழுகூற்றங்களாகப்பிரிந்திருந்ததென்றும்,

vii. அவற்றுள், மிழலைக்கூற்றம் ஒன்று என்றும் விளங்கும்.

---

* பாண்டிநாடு, புனல்நாடு, பன்றிநாடு என்றபெயர்கள் தேர்க்காட்டூர்க் கையெழுத்துப்பிரதியிலில்லை. பன்றிநாடு என்பது வராகமலையெனப்படும் பன்றிமலை அல்லது பழனிமலையுள்ளநாடு, அல்லது பன்றிக்குறும்பர்பன்னிருவர் இருந்துவந்தநாடு. தில்லைநம்பியின் திருவிளையாடற்புராணம், 59-ம் திருவிளையாட்டைப்பார்க்க. பழனி என்பது பன்றியென்பதன்விகாரம் என்பர்.

† இக்கூற்றத்திலுள்ள ஒல்லையூரைவர்ணிக்கும் புறநானூற்று 242-ம் பாட்டை மகா-௱-௱-ஸ்ரீ சேஷையரவர்கள் நன்குக அறிந்தவர், அதை அழகாக ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்த்திருக்கிறாராதலால்.

மேற்கூறிய கானநாட்டின் ஒருபெரியபாகத்திற்கு ஏறக்குறைய 800 வருஷங்களுக்குமுன் "விருதராஜபயங்கர*சோழவளநாடு"என்ற பெயரிடப்பட்டது.

"கானநாடாகிய விருதராஜபயங்கரவளநாடு"† என்னும் சொற்றொடரைக்கொண்ட புதுக்கோட்டைராஜ்யத்தின்சிலாசாசனங்களின் பிரதிகள் 30-க்குக்குறையாமல் என்னிடமிருக்கின்றன.

ஆதலாற் பாண்டியநாட்டிற்கு வடக்கெல்லையெனப்படும் வெள்ளாற்றிற்குத் தென்பாகத்திலுள்ள கானநாட்டின் ஒருபாகந்தான் திருப்பெருந்துறையைக்கொண்ட மிழலைநாடாம்.

(3) மிழலைக்கூற்றத்தின்முக்கியநதி திருமெய்யத்தலத்திற்கு ஒரு மைல்வடக்கிலும் வெள்ளாற்றிற்கு ஆறு அல்லது ஏழுமைல் தெற்கிலும் ஓடித் திருப்புனவாயில் என்னும் சிவஸ்தலத்தின்பக்கத்திற் கடலிற்சேரும் பாம்பாறு என்றுகூறலாம். இந்தமிழலைநாட்டின் பெயரைக்கொண்ட புதுக்கோட்டைராஜ்யத்துச்சிலாசாசனங்களின் பிரதிகள் பத்தொன்பதிற்குக்குறையாமல் என்னிடமிருக்கின்றன. இவற்றுள், சிலகல்வெட்டுக்கள் மிழலைநாட்டுமேல்பாகத்தையும்,வேறு சில மிழலைநாட்டுநடுப்பாகத்தையும் சேர்ந்தவை யென்று பின்வரும் கல்வெட்டுவாக்கியங்களால்விளங்கும்.

1. தாஞ்சூர் (மூன்றுகல்வெட்டுக்கள்) "மிழலை மேல்கூற்று மீபாம்பாற்றுநாடு"

2. காரமங்கலம் (மூன்றுகல்வெட்டுக்கள்) ஷை ஷை

3. வாளராமாணிக்கம் (ஆறுகல்வெட்டுக்கள்) ஷை ஷை

---

* கலிங்கத்துப்பரணியைப்பார்க்க.

† சென்னைக் கல்வெட்டு இலாகா உத்யோகஸ்தர்களாற் பின்கண்ட இலக்கங்களாகத் தாக்கல்செய்திருக்கும் கல்வெட்டுக்களையும்பார்க்க.

1906-ம் வருஷத்து 388-ம் இலக்கக்கல்வெட்டு.

1907-ம் „ 162-ம் „

ஷை 163-ம் „

4. இரும்பாநாடு* புதுக்கோட்டையின் எல்லைப்பாகம் (ஏழுகல் வெட்டுக்கள்) இவற்றுள் ஆறுசிலாசாசனங்களில், 'மிழலைநாட்டு நடுவில்கூற்று'† என்றும், ஏழாவதுகல்வெட்டில் "மிழலைநாட்டு‡நளம்பூரான" என்றும் கண்டிருக்கிறது.

மேற்கூறிய நான்கு ஊர்களும் ஆளுடையார்கோவில்ஸ்தலத்தைப் போல் புதுக்கோட்டைராஜ்யத்தின்தென்கிழக்கில் உள்ளவை. அவ்வூர்கள் ஆளுடையார்கோவிலினின்று முறையே 12, 9, 8, 4 மைல் தூரத்திலுள்ளவை என்றால்அந்தத்தலத்திற்கு இவை சமீபத்திலேயே இருந்துவந்திருக்கின்றனவென்றும், ஆளுடையார்கோவில் மிழலைக் கூற்றத்தில் இருந்திருக்கவேண்டும் என்றும் எண்ணலாம். மிழலைநாட்டின் "நடுவில்கூற்று" ஆளுடையார்கோவிற்பக்கமும் "மீபாம்பாற்றுக்கூற்று" புதுக்கோட்டைராஜ்யத்தின்பாகமும் ஆகின்றதனால், மிழலைநாடு (புறநானூற்று 24-ஆம்பாட்டினின்று நாம் அறிகிறபடி) கடற்கரைவரைபரவியிருந்ததென்றெண்ணுவதுடன், அதன்கீழ்பாகம் கீழ்பாம்பாற்றுக்கூற்று அல்லது கீழைக்கூற்று என்ற பெயரைத் தாங்கியிருக்கலாம் என்றும் ஊகிக்கலாம். ஆதலால் திருப்பெருந்துறை கீழ்கடற்கரையை அடுத்த ஊரே.

II வடமொழி 'ஹாலாஸ்யமாகாத்மியம்' என்னும் கிரந்தம் திருப்பெருந்துறை கீழ்சமுத்திரக்கரையை அடுத்திருந்ததென்று இரண்டு சுலோகத்திற் சுருக்கமாயும் தெளிவாயும் தெரிவிக்கிறது.

---

*இது, பாண்டியமண்டலத்தைச்சார்ந்த சுந்தரபாண்டியவளநாட்டின்கண் இருந்தது என்று சிலகல்வெட்டுக்கள்கூறும். மாணிக்கவாசகர் இருந்ததாக மகா-ள-ள-ஸ்ரீ சேஷையரவர்கள்கூறியகாலத்திற்குப் பலநூற்றாண்டுகளுக்குப் பின் இராஜராஜசோழவளநாடு என்றும் இவ்வளநாடு பெயர்பெற்றிருந்தது.

† மிழலைக்கூற்றத்தின் இந்நடுவிற்கூற்று, சென்னைக் கல்வெட்டு இலாகாவின் 1908-ஆம்வருஷத்து 130-ஆம் இலக்கக்கல்வெட்டிற் பேசப்பட்டிருக்கிறது.

‡மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்கள் தம்முடைய "Ancient India" அல்லது புராதனஇந்தியாவின்படங்களொன்றில் மிழலைநாட்டையாண்ட எவ்வியின்தேசத்தைத் திருநெல்வேலிஜில்லாப்பக்கத்திற்காட்டியிருப்பது எக்காரணத்தினால் என்று விளங்கவில்லை.

"प्राङ्मुखः प्रययौ धीमान् प्राक्समुद्रतटं प्रति ।
ससैन्यः [illegible] स्थितः ॥
मध्ये विश्रम्य विश्रम्य [illegible] ।
श्रीमहातीर्थमिति [illegible] ॥"*

அதாவது (குதிரைவாங்கப்புறப்பட்ட அந்த) "புத்திமான் கிழக்கு முகமாகக் கீழ்சமுத்திரக்கரையைநோக்கிச் சென்றார். கணக்கற்ற பணக்குவியலுடனும் சேனையுடனும் கூடினவராய் ஆங்காங்குச் சிரம பரிஹாரத்திற்காக வழியில் தங்கித்தங்கிப்போன அவர், தனக்குயர் வில்லாத "ஸ்ரீமகாதீர்த்தம்" அல்லது "திருப்பெருந்துறை" [ஸ்ரீமகா தீர்த்தம்=திருப்பெருந்துறை; ஸ்ரீ=திரு; மகா=பெரும்; தீர்த்தம்= நீர்த்துறை.] என்னும் சிவஸ்தலத்தை அடைந்தார்.

இவ்விருசுலோகங்களினின்று திருப்பெருந்துறை மதுரைக்குக் கிழக்குத்திக்கிலேதான் இருக்கிறது என்பது வியக்தமாகவிளங்கு கிறது.

III. மற்றும், மூன்றுசிவஸ்தலங்களைக்குறித்த விடுகதையைப் போன்ற பழமொழிஒன்று புதுக்கோட்டைக்குத்தென்கிழக்குப்பாகத் தில்வழங்கிவந்தது. அப்பழமொழி, "கரை குளத்தினின்று ஒருகாதம்; துறையினின்று ஒருகாதம்" என்பதுதான். இவ்விடுகதையில் மூன்று ஸ்தலங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. கரை என்பது, அன்னம் முடியைத்தேடுவதாகவும், வராகம் அடியைத்தேடுவதாகவும் செய்யப் பட்டஆச்சரியகரமானவேலைப்பாடமைந்த "லிங்கோத்பவர்" விக்ர கத்தைக்கொண்டு முற்காலத்திற் பெயர்பெற்றிருந்த பழங்கரைத்தலம். குளம் என்பது, தேவாரத்திற்கூறப்பட்டுள்ள வைப்புத்தலங்களுள் ஒன்றாகிய வரந்தை என்று சிலர் ஊகிக்கும் பிரசித்திபெற்ற திருவரன் குளம்†. துறை என்பது பிரஸ்தாபத்திலுள்ள திருப்பெருந்துறை.

*ஹாலாஸ்யமாஹாத்மியம் 64-ஆம் அத்தியாயம் 42, 43, 44-ஆம் சுலோகங் கள்.

† மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இத்தலமான்மியத்தைப்பாடஆரம்பித்து நாட்டுப்படலத்துடன் சில அசௌகரியங்களைமுன்னிட்டு நிறுத்திவிட்டார்கள். மகாமகோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் அச்சிட்டிருக்கும் பிள்ளை யவர்களின்பிரபந்தத்திரட்டைப்பார்க்க.

இவ்விடுகதைரூபமாக, பழங்கரை எங்கேயிருக்கிறது? என்று கேட்ட ஒருவருக்கு "(பழங்)கரை(திருவான்)குளத்தினின்று ஒருகாததூரத்திலும், (திருப்பெருந்)துறையினின்று ஒருகாததூரத்திலும் உளது" என்று மறுமொழிகொடுக்கப்பட்டதாம். ஆகவே, திருப்பெருந்துறை மற்ற ஆதாரங்களின்படி எவ்விதம் அமையுமோ அவ்விதமே புதுக்கோட்டைக்கு ஏறக்குறைய 25-மைல்தூரத்திலுள்ள ஸ்தலமென்று ஏற்படுகிறது. அரண்தாங்கி புதுக்கோட்டையினின்று இருபதுமைல் என்று கூறும்பொழுது விடுகதையிற்காட்டியகணக்குத் தவறன்றென்றுவிளங்கும்.

ஆதலால், திருப்பெருந்துறை மிழலைநாட்டு ஊர் என்றும், அந்நாடு தஞ்சாவூர்ஜில்லா ஆளுடையார்கோவிற்பாகத்தை உட்கொண்டதென்றும், ஆதலால் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம், ஆளுடையார் கோவிலே என்றும் கொள்ளல்வேண்டும்.

IV. திருப்பெருந்துறை மேலைச்சமுத்திரக்கரையில் இருந்திராது என்று திருவிளையாடற்புராணத்தினின்று காட்டலாம்.

குதிரைவாங்கப்புறப்பட்ட மாணிக்கவாசகர் எத்திக்கிற்போனார்?

"மேனுறு சாபந் தீர விந்திரன் வெள்ளை யானை
காலைவந் திறைஞ்சுந் தொல்லைக் கானையம் பதிய டைந்தார்"*

என்று தில்லைநம்பி கூறியிருக்கிறார். இதிற் சுட்டிக்காட்டியிருக்கும் ஸ்தலம் திருக்கானப்பேர் அல்லது காளையார்கோவிலாம். (அடுத்த பாட்டையும்பார்க்க). இது மதுரைக்குச் சுமார் 40 மைலுக்குக்கிழக்கிலுள்ள ஊர். மேலைச்சமுத்திரக்கரைக்கு மதுரையினின்றுபோகும் ஒருவருக்குக் காளையார்கோவிலில் என்னவேலை இருந்திருக்கக்கூடும். அதிகமாகவளர்ப்பானேன்! வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்திற் கூறியபடி,

"ப்ராஜ்ஞஸ்ஸ ப்ரயயௌ ப்ராசீம் ஸமுத்ரதடம் ப்ரதி ।"

"அம்மேதாவி கிழக்குமுகமாகக் கீழ்சமுத்திரக்கரையைநோக்கிப் புறப்பட்டார்" என்றே கொள்ளல்வேண்டும்.

---

*திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணம் 27-ஆம் திருவிளையாடல் 31-ஆம் பாட்டையும் 32-ஆம் பாட்டையும் பார்க்க.

V. "ஆளுடையார்கோவில்"என்பதற்குப்பொருள் ஆளுடைய நாயகரதுகோவில், அதாவது ஒரு பக்தரை (ஆசிரியவடிவங்கொண்டு) ஆட்கொண்டருளியபெருமானிடம் என்பதாம். இவ்வூருக்கேற்ற இவ்வருமைப்பெயரை விட்டுவிடக்கூடாதென்று தில்லைநம்பி தமது திருவிளையாடற்புராணத்தில், "(பெருந்)துறையாளுடையநாயகன்"* என்று கூறியிருக்கிறார். வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்திலும்

"ஜநவந்நாதர்""ஆள் உடையநாயகன்"

[ஜநம் = ஆள்; ஜநவாந் = ஆளுடையவன்; நாதன் = நாயகன்] என்று பத்துப்பன்னிரண்டு இடங்களிலும்,

"ஜநவ ஸ்தாமிநம்" அல்லது "ஆளுடையஸ்வாமியை"†

என்று ஓரிடத்திலும் கூறியிருப்பதைக்காண்க. இவ்வூர் ஸ்வாமியின் மற்றநாமங்களில் அசுவநாதர், உபதேசஸ்தலநாயகர், உபாத்தியாயர், குருந்தவனேசுவரர், முந்நூற்றொருவர் என்ற பெயர்களும் கவனிக்கத் தக்கவை. ஆதலாற் பெருந்துறையென்பதும் ஆளுடையார்கோவில் என்பதும் ஒரு ஊரையேகுறிக்கின்றன என்று கொள்ளலாம்.

VI. கானநாட்டுவிருத்தாந்தத்தைக்கூறும் தேர்க்காட்டூர்க் கையெழுத்துப்பிரதி பழையநூலாகவே ‡தோன்றுகிறது.

---

* 28-ஆம் திருவிளையாடலின் 13-ஆம் பாட்டு.

†64ஆம்அத்யாயம் 53ஆம் சுலோகத்தைப்பார்க்க. செப்புப்பட்டயம் முதலிய வற்றிற்காணப்படுகிறது என்று மகாமகோபாத்யாயர் பிரும்மஸ்ரீ சாமிநாதைய ரவர்கள்கூறும் ஆளுடைய (பரம)ஸ்வாமி என்னும்பெயர் இப்பெயரைச்சார்ந்த தாகக்கொள்ளலாம்.

‡ இது எக்காலத்துநூல் என்று கூறமுடியாது. அதிற்கண்ட கானநாட் டின்பிரிவுகளையோசித்தால் நவீனநூலாக அதைக்கொள்ளுவதுதவறு என்றே விளங்கும். கானநாட்டின்பிரிவுகளைப்பற்றிப்பேசுமிடத்து,

"அன்னமிடு சோமனெனு முக்கிரப் பெருவழுதி அம்புவியில் ஆளும் நாளில்
அரிதான நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் ஆராய்ந்து தேடிவைத்த
நன்னிலந்தன்னில்—ஏழுகூற்றம்" பதினெட்டுநாடு

"வெ(ற்றி)த்திவாழ்கின்றதிருமிழலைக்கூற்றமிகுந்தமுத்தூர்க்கூற்றம்
பத்தியான அரும்பூர்க்கூற்றம்பாரமானதிருக்கானைக்கூற்றம்
முத்தமிழ்சேர்தொகுவூர்க்கூற்றம்முதன்மையானகொடுமுளூர்க்கூற்றம்
எத்திசையான இளையான்குடிக்கூற்றம்"

என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலில், திருப்பெருந்துறையைப்பற்றிக்கூறியிருப்பது அத்தலம் கானநாட்டைச் சேர்ந்தது என்பதை விளக்கும். "மாணிக்கவாசகர்திருவிளையாட்டம் பெருந்துறை கைலாசநாதர் குருதேசிகனூடு"என்று அத்தலமிருந்த குறும்பர்நாட்டைக்கூறித்"திருமாணிக்கநல்லூர்"* என்பதையும் அதன்சம்பந்தமாக எடுத்தெழுதி, அதன் கீழ்

முத்தூர்க்கூற்றம் என்பது புறநானூற்று 24-ஆம் பாட்டிற் கூறப்பெற்ற முத்தூற்றுக்கூற்றமென் றெண்ணலாம். முத்தூற்றுக்கூற்றம் மிழலைநாட்டையடுத்திருந்ததாக அந்நூலிற்கூறியவிதம் இங்கும் மிழலைக்கூற்றத்தையடுத்து முத்தூர்க்கூற்றம் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கூற்றம் இராமநாதபுர சமஸ்தானத்தின் வடக்கில் ஒருபாகத்தைக் கொண்டிருந்ததென்றும், "உலகளந்தசோழநல்லூர்" என்ற பிரதிநாமத்தையுடைய கப்பலூர், அஞ்சுகோட்டை முதலிய ஊர்களைக் கொண்டிருந்ததென்றும் சென்னைக் கல்வெட்டு இலாகா 1909-ஆம் வருஷத்து 59-ஆம் கல்வெட்டினாலும் 1907-ஆம் வருஷத்து 408-ஆம் கல்வெட்டினாலும் அறிகிறோம். அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரம் காடுகாண்காதையுரையில்ஆதியிற் சோழநாட்டைச்சேர்ந்திருந்து பிறகு பாண்டியநாட்டின் பாகம் ஆயிற்று என்றுகூறும் முத்தூர்க்கூற்றம் இப்பிரிவுதானென்று கொள்ளலாம். கானை என்பது புறநானூற்று 21-ஆம்பாட்டிற்கூறப்பெற்ற கானப்பேராம். தேவாரத்தைப்பார்க்க. கானைக்கூற்றமென்பது புறநானூற்றுவிசேடக்குறிப்பின் 3-ஆம் பக்கத்திற்கூறியுள்ள திருக்கானப்பேர்க்கூற்றம். இது காளையார்கோவிலை உட்கொண்டபாகம். மிழலையும் கானையும் ஸ்தலங்களாகையால் திருமிழலைக்கூற்றமென்றும் திருக்கானைக்கூற்றமென்றுங் கூறப்பட்டன. இளையான்குடியென்பது இராமநாதபுரத்தைச்சேர்ந்த இளையான்குடிநாடாக இருக்கலாம். அரும்பூர்க்கூற்றம், கொடுமுளூர்க்கூற்றம், தொகுவூர்க்கூற்றம் ஆகிய கூற்றங்களுள் ஒன்று, கானநாட்டார்க்கும் கோனாட்டார்க்கும் நேர்ந்த சச்சரவுகளை விளக்கும் சாசனங்களில் அடிக்கடிகூறப்படும் அதளிக்கூற்றமாகவேண்டும்.

*திருப்பெருந்துறைப்புராணம் பெருந்துறை விசேடப்படலம்17-ஆம் பாட்டினின்றும், மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலம் 6-ஆம் பாட்டினின்றும் இவ்வூருக்குப் பவித்திரமாணிக்க(புர)ம் என் றொருபெயர் இருந்ததென்று நன்குவிளங்குகிறது. இவ்வூரிலுள்ள ஸ்வாமி (திரிமூர்த்தி) தேசிகர், (ஜகத்)குரு என்ற நாமங்களைப்பெறவே "குறும்பர்நாடு" என்றது "குருதேசிகனூடு"ஆயிற்று. "குறும்பர்நாடு" என்றபெயரால், ஆவுடையார்கோவில் இருக்குமிடமானது, ஆதியிற் குறும்பவேளாளர் என்ற ஒரு காராளர்வகுப்பினரைச்சேர்ந்ததென்று அறியலாம். ஒரு "எழுதரும்புகழான்" திருப்பெருந்துறைப்புராணத்திற்கூறிய விதம், "கங்கைசூழ்காசிநின்றும்" வரவழைக்கப்பட்டிருந்த அந்தணர்களுக்கு அந்நிலத்தின் ஒருபாகத்தை அளித்தான் என்றும், பிறகு குறும்பர்கள் தங்கள் நிலத்தை இவர்களிடத்திருந்து அடையமுயற்சிசெய்து பாண்டியன்முன் இந்நிலம்,

"........மன்னவாமறையோரென்பார்
முன்றமதென்பாராயின்முயலுக்குக்கோடுண்டென்று" பெரு. படலம், 67.

வாதித்துப் "பன்னிரண்டுஆள்பரிசம்" வெட்டினாலும் நீர் ஊறாது என்று அவர்கள்நிலத்திற்கு அடையாளம் கூறினரென்றும், ஆவுடையார் பிராமணர் பக்கம் வழக்குரைத்து வெட்டியவுடன்,

"தடையறவே நீரூற்றந் தங்காமல் வந்துவிடும்"

என்று சாதித்து,

எல்லையாக உப்பாறு என்பதனையும், பாம்பாற்றின் முகத்துவாரத்தி லுள்ள திருப்புனவாயிலின்பக்கத்திலிருக்கும் சுந்தரபாண்டிய பட்டினத்தைக்குறிக்குமோ என்று எண்ணக்கூடிய "நாங்கன் பாண்டியபட்டினம்" என்பதையும் மற்ற எல்லைகளுடன்சேர்த்திருப் பது* அத்தலத்தின் ஸ்வாமிபெயர்களாகிய தக்ஷிணகைலாசநாதர், திரிமூர்த்திதேசிகர், ஜகத்குரு என்பவற்றுடன் கவனிக்கத்தக்கது.

VII. (1) திருப்பெருந்துறையைக் கடற்கரையூராகக் கவிகள் வர்ணித்திருப்பது அவ்வூரைக்கொண்ட மிழலைநாட்டைப்பற்றியே. முந்நீரையடுத்தது மிழலையென்பது புறநானூற்று 24-ஆம் பாட்டால் "வெள்ளிடைமலைபோல்" விளங்குகிறது. ஆளுடையார்கோவிலுக் குத் தென்கிழக்கிற் பன்னிரண்டுமைல்தூரத்திலுள்ளதும் மிழலைச் சதகம் 41-ஆம்பாட்டில் மிழலைநாட்டிலிருந்ததாகக்கூறப்பெற்றது மான திருப்புனவாயில், கடற்கரையை ஒட்டியது. எவ்விதம் இந் நாட்டிற்குக் கீழெல்லை "உப்பாறு" என்று தேர்க்காட்டூர் ஓலைச் சுவடியிலெழுதப்பட்டிருக்கிறதோ அவ்விதமே ஞானசம்பந்தசுவாமி களும், சுந்தரமூர்த்திசுவாமிகளும் புனவாயிலைப்பற்றிப் பின்வரு மாறு கூறியிருக்கிறார்கள்.

"கங்கை தனையழைத்துக் கீழாறுய்வாருமென்று"
கட்டளையிட்டு, இதைப் பரிசோதிக்கவந்தமன்னர்முன்,

"அப்படியே யாங்குவெட்டி யாழமட்டுங் காணுமுன்னே
கங்கைபொங் கிக்குதித்துக் கீழாறு யோட"

நீரூற்றங்காட்டினுரென்றும், அதனால்,

"கல்வெட்டி நாட்டினுர் காராள ரெல்லையிலே ;
வேதியர்க ளெல்லை விதவிதமாய்க் கல்நாட்டி
அந்தணர்க்குக் காணி யறுதியிட்டார் வந்தமன்னர் ;
குறும்ப ரனைவோருங் கூடி விசாரமிட்டு
அந்தணர்க்குக் காணி யறுதியிட்டோ மென்றுசொல்லி
ஊர்குடியும் விட்டு ஒதுங்கினுர் தென்திசையில்"

(ஆவுடையார் வழக்குரைத்த அம்மானை) என்றும் அறிகிறோம்.

மேற்கண்டவிஷயம், "விழுப்பமுள்ளசூத்திரர்வாழ்மிழலைநாடு" என்று இந் நாட்டைத் திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத்திற்கூறியிருப்பதனு லும் விளங்கும்.

* இப்புத்தகத்தில் ஔவைபாட்டென்றுகூறப்பெற்ற எல்லைப்பாட்டுக் கள் பல உள. அவை எனக்கு விளங்கவில்லை. திறமையுள்ளவர் ஒருவர் இப் புத்தகத்தைப்பரிசோதித்துப் பிழையற ஒரு காளுட்டப்படத்துடன் அச்சிடுவித் தல் பழையசரித்திரசர்ச்சைகளில் முயற்சிப்பவர்களுக்கு அதிக உபயோகமுள்ள காரியமாகும். குறும்பர்நாட்டின் கீழெல்லை பின்வருமாறு இவ்வோலைச்சுவடி யில் எழுதப்பட்டிருக்கிறது.

"மாணிககவாசகனுயினு ரதிருவிளையாடடமபெருநதுறை கைலாசநாதர குரு தெசிகனுடு. ஆதிஆவுடையாருககும முநதினதலம திருவடி திருமாணிககநல லூர ஆவுடையார எலலை.

" நரல்சுரி சங்கொடு மிப்பியுந் திங்கல மல்கிய
போநகடல் வெண்டிரை வந்தெறி யும்புனவாயிலே" மூன்றாந்திருமுறை.

" கற்குன்றுந் தூறுங் கடுவெளி யுங்கடற் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடு மெம்பெரு மான்புன வாயிலே" ஏழாந்திருமுறை.

மிழலைநாடு சமுத்திரக்கரையை, அடுத்திருந்தது என்பது *மிழலைச்சதகத்தினின்றும் வியக்தமாகத் தெரிகிறது. அங்கு வசித்து வந்த காராளவேளார்களுக்குட்பட்டநிலத்தின் எல்லைகள் பின்வருமாறு இச்சதகத்திற் கூறப்பட்டிருக்கின்றன.

"கேளும் புகழிரும் பாபுரி மேலெல்லை கீழெல்லைநீர்
நீளுங் கடலந்தப் பாம்பாறு தெற்கெல்லை நேர்வடபா
லாளும் புவியெல்லை தானம் புவிநதி யாய்விளங்கும்
வேளும் புகழெழிற் காராளர் வாழு மிழலையிலே"

இப்பாட்டில் இரும்பாபுரியென்பது மேலேகூறப்பட்ட இரும்பாநாடாம். அம்புலியாறு சுலோசனுபாய்சத்திரத்திற்கருகில் சமுத்திரத்திற்கலக்கும் புதுக்கோட்டைச்சீமையாறு. பாம்பாற்றிற்கும் அம்புலியாற்றிற்கும் இடையில் உள்ள வெள்ளாறு,

.................."செழும்பூந் தரங்கச் சுவேதமெனும்
நதிவந் துலாவிய நாட்டார் மிழலை நராதிபரே"

என்ற அடிகளிற் கூறப்பெற்றது.

(2) இதுநிற்க, "பெருந்துறை" என்பதை "முசிரிபோன்ற பெரியதுறைமுகப்பட்டினம்" என்றெண்ணி இக்காலத்தாருட் சிலர் ஏன் இடர்ப்படுகிறார்கள்? பலகாலத்திற்குமுன்னெழுதப்பெற்ற ஹாலாஸ்யமாஹாத்மியத்தில் திருப்பெருந்துறையை "ஸ்ரீமகாதீர்த்தம்" என்றன்றோ கூறியிருக்கிறது. திருப்பெருந்துறையைக் கடற்றுறைப்பட்டினமென்று இந்தநூலாசிரியர் எண்ணியிருந்தால் "கடற்றுறை" என்றபொருளைக்கொண்ட தகுந்தவடமொழிப்பதத்தை உபயோகித்திரார? தமிழ்நூலாகிய திருப்பெருந்துறைப்புராணத்திலும்,

நலலதபபா ஆவுடையார குறுமபூரஎலலை நெரகிளககு உயபாறு கொரை கரை ஆறெருடிநாஙகனபாணடியபடடணம தெனனஙகுடி மாவூரகரை விசிறி ஒடை நாகபபாசூளநதபுரவுநடு திலலைமெடுநாடடுகெலலை"

* இச்சதகத்தை அன்புடன் உதவியவர் மிழலைச்சதகத்தை யியற்றிய சர்க்கரைப்புலவர்மரபினுதித்தவரும் மன்னார்குடிப் பிண்டிலேகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதருமாகிய சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள்.

"ஒழிதரான் வெட்டுந் தோறு முறுபுனல் பெருகி யெங்கும்
வழிதரப் பரவ லாலே பெருந்துறை யெனும்பேர் வாய்ந்தது" என்றும்,

"இறைவன் முன்ன மெதிர்வழக் காடி வெட்டு*
நிலவடு வகத்தி னின்று நீரெழு நீர்மை தன்னால்
பெருந்துறை யென்றோர் நாமம் பெற்றது"

என்றும் கூறப்பட்டிருக்கிறது. முன்காட்டியபடி ஆவுடையார் வழக்குரைத்து வெட்டியவுடன் நீர்ப்பெருக்கைக்காட்டியகாரணத்தினாலன்றோ "திருப்பெருந்துறை" என்றபெயரை இத்தலம் அடைந்தது.

எனக்குத்தெரிந்தமட்டில் மாணிக்கவாசகர் அடைந்தகடற்றுறை பரஞ்சோதிமுனிவர்திருவிளையாடற்புராணத்திற்கூறியுள்ளகடற்றுறைதான்; அதாவது: அவர், சிவபெருமானது "கருணை வெள்ளப் பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்."†

(3) மாணிக்கவாசகர் மதுரையைவிட்டுப்புறப்பட்டபொழுது பெருந்துறையைநினைத்துப்புறப்பட்டவர் ஆகார். பலகாலமாய்த் துறைமுகங்களாகவழங்கிவரும் தொண்டி, நாகபட்டினம் முதலிய துறைகளிற் குதிரைகள் இறங்கிவரும் வழக்கத்தையறிந்து கீழ்சமுத்திரக்கரையைநோக்கிப்புறப்பட்டார். போகும் மார்க்கத்தில் திருப்பெருந்துறையைநெருங்குகையில்,

"திருந்துமுற் றவத்தி னாலே செல்வமே லாசை விட்டுப்
பரந்தநெஞ் சொடுங்கக் கண்டு பன்முறை யதிச யித்திப்
பெரும்பதி யடையா முன்ன ரடைந்தது பேரன் பெந்தை
பொருந்திய தலங்க டம்முட் டலமிது போலொன் றின்றே"‡

என்று அதிசயித்து அவ்வூரில் மயங்கி நின்றுவிட்டார். ஆளுடையார்கோவிற்பெண்குழந்தைகள் பாடிவரும் கும்மிப்பாட்டொன்றில்,

---

* பெருந்துறைப்படலம், 78. மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலம், 2-3. இவ்விதம் வெட்டப்பட்டுக் கங்கைநிறைந்துநின்றதடாகம் திருவெம்பாவையில் "மெய்யார்(பெருமைநிறைந்த)தடம்பொய்கை" என்றும், வடமொழி ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் "ஸ்ரீமத்தடாகம்" என்றும் கூறியிருக்கும் தீர்த்தமாக இருக்கலாம்.

† 68-ஆம் படலம் 29-ஆம் பாட்டு.

‡ வேம்பத்தூரார்திருவிளையாடற்புராணம், 27-ஆம் திருவிளையாடல் 40-ஆம் பாட்டு.

" பாதையி ருப்பத றியாமல் —திகைப் *
பூடுமி தித்தவர் போலானார்"

என்று கூறுவதற்கேற்ப, "செயல் வேறாகி" வந்தவிஷயத்தைநினையாமல் 'மார்க்கவசத்தினால்'† அடைந்த ஊரிலேயே எப்பொழுதும் இருப்பதாகத் தீர்மானித்து,

"ஸ்ராவஸ்ராஜெளதுவஜாதஷிஷ்யாமிஷிவாலயே"

"மோக்ஷப்ராப்தியின்பொருட்டு இவ்வூரிலேயே இருக்கப்போகிறேன்; மற்றோரிடத்திற்குப்போகமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டார். இது குதிரைவாங்கும் உத்தேசமுள்ளவர்வார்த்தையாகவாதோன்றுகிறது? ஆதலால்தான் பாண்டியனிடத்தில் அவன் அமைச்சர்கள்

" பெருந்துறை யடைந்தபோதே பித்துமேற் கொண்டான்"

என்று முறையிட்டார்கள்.

(4) இவர் இவ்விடத்திற் குதிரைவாங்கவந்தவரல்லர் என்பது வேறுவிதமாகவும் வியக்தமாம். எவ்விதம் எனின், தம்முடன்வந்த மனிதர்களை மதுரைக்குத்திரும்பச்செய்தபொழுது,

" வரர்புக ழாடித் திங்களிற் குதிரை வந்திடா தாவணி மதியிற்
கரைதோறு மிறங்கு மையமோ வில்லை" (வேம்பத்தூரார்திருவிளையாடற்புராணம், 27-ஆம் திருவிளையாடல் 42-ஆம் பாட்டு.)

என்றன்றோ பாண்டியனுக்கு எழுதியனுப்பினர். பாண்டியனும் இவர் மதுரைக்குத் திரும்பியதும்,

" மறங்கடி பொருட னக்கு வாசியெவ் வளவு கொண்டி
ரிறங்கிய துறைநா டேதேது" (ஷை 72-ஆம் பாட்டு.)

என்று கேட்டதும் கவனிக்கத்தக்கதே.

" பித்த னொழிந் தேனெம்பி ரானுக்கே " என்றவிதமாக நடவாமல், குதிரைவாங்கும் எண்ணத்துடன் மேற்கூறிய ஆவணி மதியில் "கரைதோறும்" போய்ச் சுந்தரபாண்டியவளநாட்டிலுள்ள

---

* திகைப்பூடு என்பது அரணையென்ற ஜெந்துவாம். அதை மிதித்தவர்களுக்குத் திகைப்பு அல்லது புத்திமயக்கம் உண்டாகுமாம்.

†வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்தின் 64-ஆம் அத்தியாயத்தின் 43-ஆம் சுலோகத்தையும் 47-ஆம் சுலோகத்தையும் பார்க்க.

"தென்னன்பெருந்துறை"யைக்கொண்ட பாண்டிநாட்டுத் தொண்டி போன்ற துறைமுகப்பட்டினங்களில் வேண்டிய அளவு குதிரைகள் கிடைக்காமல் இவர் இடைஞ்சற்பட்டிருந்தால் நாகபட்டினம், தோப் புத்துறைபோன்ற சோழநாட்டுத்துறைமுகங்களுக்கும்* போயிருப் பார். விஷயம் வேறாகவன்றோமுடிந்தது. இவர் வந்தகாரியத்தை மறக்க, மிழலைநாட்டுநரிகள் பரியாயின!

VIII. இருநூற்றைம்பதுவருஷத்திற்குமுன்னுள்ளகாலத்தை மிகவும்பழையகாலமென்று சொல்லக்கூடாது. ஆயினும் அக் காலத்திற் பெருந்துறையை ஆவுடையார்கோவிலென்றுகொண் டிருந்தார்கள் என்று வியக்தமாகத்தெரிகிறது. பதினேழாம்நூற் றாண்டிற் பிரபலமாகவாழ்ந்த திருமலைச்சேதுபதியின் ஒருசாசனத் தின் பின்கண்டபாகத்தைப்பார்க்க.

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹனசகாப்தம் ஆயிரத்தைந்நூற்று எண் பத்திரண்டுக்குமேல் செல்லாநின்ற சார்வரிநாமஸம்வஸ்ரத்து...... காலத்தில் திருப்பெருந்துறையில் ஆவுடைய பரமசுவாமியாருக்கு உஷத்காலபூஜைக்கு ஸ்ரீ திருமலைசேதுபதிபுண்ணியமாக தானசாஸன பட்டையம் கொடுத்தபடி."

IX. ஆளுடையார்கோவில் என்ற ஊர் வடக்கூர் தெற்கூர் என்ற இருபாகங்களாகப் பிரிந்திருக்கிறதென்றும், ஆத்மநாதர்கோ வில் தெற்கூரில் இருக்கிறதென்றும், வடக்கூரிலுள்ளகோவில் அர்த்த மண்டபத்தில் ஒரு சிலாசாசனம் காணப்படுகிறதென்றும், அக்கல் வெட்டின் சிலபாகங்கள் பின்கண்டபடி என்றும் தெரியவருகிறது.†

---

* கடல்கொண்டழிந்துபோன காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்வதாக உத்தேசித்திரார். மணிமேகலை 25-ம் காதையைப்பார்க்க. ஞானசம்பந்தசுவாமி கள் நாகபட்டினத்தை,

"வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடனாகை"

என்று கூறியிருக்கிறார்.

† இவ்விஷயத்தைப்பற்றி என் நண்பர் பட்டுக்கோட்டைவக்கீல் மகா-ா-ஸ்ரீ வெங்கடேசுவர ஐயரவர்கள் அன்புடன் எழுதியனுப்பியிருக்கிறார்கள். மற்றப் பாகங்கள் அச்சுக்கோர்த்தானபிறகே இவ்விஷயம் எனக்குத்தெரியவந்தபடியால் இதை எவ்விடத்தில் அச்சிடவேண்டுமோ அவ்விடத்திற் சேர்க்கக்கூடவில்லை.

"..........திருப்பெருந்துறையான பவித்ர மாணிக்கசதுர்வேதி மங்கலத்து.........திரிபுவனவீரதேவர்க்கு யாண்டு எழு(முப்)பத்தி நாலாவது.........கல்லிலும் செம்பிலும்வெட்டிக்கொள்க"

இக்கல்வெட்டினால் திரிபுவனவீரதேவர்காலத்தில் ஆளுடையார்கோவிலையே திருப்பெருந்துறைஸ்தலமாக எண்ணியிருந்தார்கள் என்று விளங்கும். இத்தலத்திற்குப் பவித்திரமாணிக்கபுரம் என்று வேறொருபெயர் இருந்ததென்று திருப்பெருந்துறைப்புராணம் மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலத்தினின்று அறியலாம்.

திரிபுவனவீரதேவர் யாரென்றும் அவர் காலம் எது என்றும் விசாரிக்கலாம். இப்பெயரைக்கொண்ட சோழவம்சத்து அரசர் இருவர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் (மூன்றாம்) குலோத்துங்கசோழன் என்ற பெயரைத் தரித்துக் கோவில்கட்டுவதில் அதிக கீர்த்தியடைந்தவர். சிதம்பரத்திலுள்ள நடராஜர்கோவிலையும், கச்சியிலுள்ள ஏகாம்பரநாதர்கோவிலையும், மதுரையிலுள்ள சுந்தரேசுவரர் கோவிலையும், திருவிடைமருதூரிலுள்ள மகாலிங்கேசுவரர்கோவிலையும், கும்பகோணத்திற்கு ஒருமைலுக்கு மேற்கேயிருக்கும் தாராசுரத்தி*லுள்ள ஐராவதேசுவரர்கோவிலையும், கும்பகோணத்திற்கு மூன்றுமைலுக்குக் கிழக்கிலுள்ள திரிபுவனம் கம்பஹரேசுவரர்கோயிலையும், திருவாரூரிலுள்ள தியாகராஜஸ்வாமிகோயிலையும் இவர் கட்டினார், அல்லது புதுப்பித்தாரென்று தெரியவருகிறது. இவர் சிலாசாசனங்கள் அநேகமாய் மேற்கண்டகோவில்களிற் காணப்படுகின்றன. ஆதலால் இச்சோழராஜன்காலத்திலேயே மேற்கண்ட திருப்பெருந்துறைச் சிலாசாசனம் வெட்டப்பட்டதென்று எண்ணலாம். இவர் கி. பி. 1178-ஆம்வருஷம்முதல் கி. பி. 1216-ஆம்வருஷம் வரை அரசராக இருந்தார். ஆகையால் ஆளுடையார்கோவிலை எழுநூறுவருஷங்களுக்குக் குறையாமல், திருப்பெருந்துறையென்று எண்ணிவந்திருக்கிறார்கள் என்பது வியக்தம். திரிபுவனவீரதேவர் என்பவர் இவரல்லர்; 1331 அல்லது 1332-ஆம்வருஷத்தில் அரசரான சோழராஜனென்றுகொண்டாலும்; ஐஞ்ஞூற்றைம்பதுவருஷங்களாகத் தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலையே திருப்பெருந்துறைஸ்தலமென்று வியவகரித்துவந்திருக்கிறார்களென் றறியலாம்

---

* ராஜராஜேசுவரம் என்பது ராராசுரம் ஆகி, தாராசுரம் என்று மாறியதாம்.

X. தமிழில் நான்குபுராணங்கள் திருப்பெருந்துறையைப்பற்றி இருக்கின்றனவென்றும், இந்நான்குபுராணங்களும் தமிழ்நாட்டு ஆளுடையார்கோவில்சம்பந்தமாகவே இயற்றப்பெற்றிருக்கின்றன வென்றும் மஹாமஹோபாத்தியாயராகிய பிரும்மஸ்ரீ சாமிநாதைய ரவர்கள் பதிப்பித்திருக்கும் திருப்பெருந்துறைப்புராணத்தின்முக வுரையினின்று அறிகிறோம். இவை முறையே சுமார் முன்னூறு வருஷங்களுக்குமுன்னும், (கி. பி. 1628-ஆம்வருஷத்தில்) நூற்றைம் பதுவருஷங்களுக்குமுன்னும், (தஞ்சாவூர்த் துளஜேந்திரமகாராஜா அவர்கள்நாளில்) நூற்றிருபதுவருஷங்களுக்குமுன்னும், ஐம்பது அல்லது அறுபதுவருஷங்களுக்குமுன்னும் எழுதப்பட்டனவாகும். இதனால் வடமொழி ஹாலாஸ்யமாஹாத்மியமும், வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணமும் எழுதப்பட்ட அக்காலத் தபிப்பிராயத் தையே பிற்காலத்தார்கொண்டிருந்தார்கள் என்று நன்குவிளங்கும். திருப்பெருந்துறை மேலைச்சமுத்திரக்கரையிலுள்ளதோ என்று மயங்குகிறவர்கள் இக்காலத்தாருட் சிலரே என்று எண்ணுகிறேன்.

சகல நடவடிக்கைகளும் பலநூற்றாண்டிற்குமுன் தில்லைநம்பி எழுதியபடியே இன்றும் ஆளுடையார்கோவிலில் நடந்துவருகின் றன. அவ்வூர் உத்ஸவங்கள் மாணிக்கவாசகரைச் சார்ந்தனவே. குருந்தமரம், பள்ளிக்கூடப்பிள்ளையார் முதலியவற்றைப்பற்றிப் பரக்க மகாமகோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் மிகுந்த சிரமத்துடன் ஆராய்ந்தெழுதியிருக்கும் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர் களது திருப்பெருந்துறைப்புராணப்பதிப்பின்முகவுரையைப்பார்க்க.

இத்துடன் நான் நிறுத்திவிடலாம். ஆயினும், மகா-௱-௱-ஸ்ரீ சேஷையரவர்கள்கண்டிருக்கும் ஆக்ஷேபங்களுக்குக் கொஞ்சம் சமா தானம் கூறுவதே தகுதி.

I. திருப்பெருந்துறை "தெங்குதிரள்சோலைகளாற் சூழப் பட்டது. அது பலவும் பைங்கமுகும் செழித்துவளருமிடம்" என்பது ஒரு ஆக்ஷேபம்.

இவ்விதமரங்கள் மலையாளத்தைச்சேராதநாடுகளிலும் உண்டு. புதுக்கோட்டைச்சந்தையில் விற்பனைக்குவரும் தென்னங்கீற்றுக் களும் தேங்காய்களும் பெரும்பாலும் ஆளுடையார்கோவிற்பக்கத்தி லுள்ளமரங்களினின்று அடையப்பெற்று அரண்தாங்கிவண்டிகளில்

வருகின்றன. பலாமரங்கள் மதுரையினின்று தஞ்சாவூருக்குப் போகும் ரஸ்தாவிற்குக் கீழ்பாகங்களில் ஏராளமாயுண்டு.

2. "குருந்தமரமும், மலைநாட்டுமரமாகக் காணப்படுகிறது" என்பது வேறு ஒரு ஆக்ஷேபம்.

யாரிடத்தில் இதை மகா-ளா-ளா-ஸ்ரீ சேஷையாவர்கள்கேட்டறிந்தார்கள் என்பது விளங்கவில்லை. இப்பொழுது புதுக்கோட்டைச் சீமையிலுள்ளகாடுகள் ஆதிகாலத்திலிருந்தகாடுகளில் நூற்றில் ஒரு பங்காகும். புதுக்கோட்டைக்குக்கிழக்கில் மலையின்பெயரேகிடையாது. அம்புக்கோவிலிலுள்ள ஒரு பிரபுவைப்பற்றி "அநுராகமாலை" எழுத ஆரம்பித்த ஒருகவி அவருக்குத் தசாங்கங்கூறக்கருதி அப்பக்கத்தில் மலை ஒன்றும் இல்லாதபடியாலும், புதுக்கோட்டைக்கு மேற்குப்பக்கங்களிலுள்ளமலைகளைக்கூறினல் வியவகாரத்திற்கு இடம் உண்டாகுமென்றுநினைத்தும், கொல்லிமலையை அப்பிரபுவினதுமலையாகக் கூறியிருக்கிறார். ஆயினும் புதுக்கோட்டைக்குக் கீழ்திக்கிலுள்ள குருந்தங்காடுகளில் வேண்டிய குருந்தமரங்கள் இப்பொழுதும் அகப்படும். அம்மரத்தின் எண்ணெய், இப்பாகங்களில் "ஐயெண்ணெய்த்தைலம்" என்ற ஒரு மருந்தெண்ணெய்செய்வதிற் சேர்க்கப்பட்டுவருவதுடன் ஏழைகளுக்கு விளக்கு எரிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. தைலாம்சமுள்ள இம்மரத்தின்பாகங்கள் தாமே எரியுமாதலால் தீவர்த்திக்குச்சமானமாக இவ்விராஜ்யத்தில் உபயோகிக்கப்பட்டுவரும் எண்ணெய்வேண்டாத "சுழுந்து" இம்மரத்தின்குச்சிகள் அல்லது உசிலங்குச்சிகளாம்.

3. அச்சனன், நின்னலேபோன்ற மலையாளத்தில் இப்பொழுது வழங்கிவரும் சிலசொற்கள், திருவாசகத்தில் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பது மற்றொரு ஆக்ஷேபம்.

இவர் பாண்டியதேசத்து முக்கியமந்திரியாயிருந்தபோது அம்மண்டலத்தைச்சேர்ந்த மலையாளதேசத்தினின்றுகிடைத்திருக்கும் ஓலைகள் ("ரிபோர்ட்டுக்கள்") முதலியவற்றைவாசித்து அத்தேசத்து மொழிகளை அறிந்தார் என்றுசொல்வது தவறாமோ? அல்லது நேரில் விஷயங்களை அறிந்துகொள்ள, பாண்டியநாட்டுச் சுற்றுப் பிரயாணஞ்செய்யுஞ்சமயமொன்றில் மலையாளத்திற் சிலகாலந்தங்கியிருந்து அப்போது சிலமலையாளவார்த்தைகளையறிந்தார் என்று

சொல்லக்கூடாதோ ? இதுநிற்க. மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள் எடுத்தெழுதியமொழிகள், மதுரைப்பக்கத்தில் மாணிக்கவாசகசுவாமிகள்காலத்தில் உபயோகத்திலில்லையென்று தைரியமாகக்கூறுவார்களா? இவர்கள் எழுதியிருப்பதைவாசிப்பவர்கள் அக்காலத்தில் மலையாளத்தில் வழங்கிவந்தபாஷை தமிழினின்றும் வேறு என்று நினைக்கும்படியிருக்கிறது. மலையாளம் என்னும்பாஷை தனியாக அப்பொழுது இருந்ததா? மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள் ஸ்தாபிக்க விரும்பும் மாணிக்கவாசகர்காலத்திற்கு500-வருஷத்திற்குப்பின்தான் மலையாளபாஷை உண்டாக ஆரம்பித்தது என்பது அநேகர் அபிப்பிராயம். பதின்மூன்ருநூற்ருண்டிலியற்றப்பட்ட இராமசரிதந்தான் இப்பாஷையின் ஆதிகாவியம் என்றும், திருவாதவூரர்காலத்திற்கு ஆயிரம்வருஷத்திற்குப்பின் எழுதப்பட்ட இக்காவியம் மலையாளத்தைவிடத் தமிழையே அதிகமாக ஒத்திருக்கிறதென்றும் மகா-ா-ா-ஸ்ரீ நாகமையர் என்பவர் கூறியிருக்கிருர்.*

"யானுமோர் பேயனே யெவர்க்கும்†"

என்றுதோன்றும்படி நிஷ்டையிலிருந்தகாலத்தில், மலையாளத்திற்கு வெளியில் அக்காலத்தில் உபயோகத்திலில்லையென்று மகா-ா-ா-ஸ்ரீ சேஷையாவர்கள்கூறும் சிலமொழிகளைக்கற்றுக்கொண்டு அவற்றை விட்டுவிட மனம்வராமல் திருவாதபுரீசுவரர் தம்முடைய திருவாசகத்திற் சேர்த்துவிட்டார்" என்று கூறியிருப்பது நியாயமாகுமா? பழையநூல்களிலுள்ள அநேகமொழிகள் இந்நாட்டில்

* திருவாங்கோடுவிருத்தாந்தம் இரண்டாஞ்சம்புடத்தைப்பார்க்க.

† பெருமாள்திருமொழி, 3, 8. இப்பெருமாள் மலையாளதேசத்தரசர்களுள் ஒருவர். இவர் கி. பி. எட்டாம்நூற்ருண்டில் இருந்திருக்கலாம். இவர் அக்காலத்திலில்லாத மலையாளபாஷையில் எழுதாமல் வடமொழியிலும் தமிழிலும் எழுதித் தம்முடையதமிழை 'இன்தமிழ்' 'நற்றமிழ்' என்று கூறியிருக்கிருர். இவருக்கு நூறுவருஷத்துக்குப்பின் இருந்திருக்கலாம் என்று எண்ணக்கூடிய சேரமான்பெருமாணயஞரும் குலசேகரப்பெருமாளைப்போல் மலையாளதேசத்தரசராவர். இவருக்குத் "திருவாலவாயின்மன்னியசிவன்" தம்முடைய திருமுகப்பாசுரத்தை மலையாளத்தில் எழுதாமல் தமிழில் எழுதியனுப்பினுர். சேரமான்பெருமாணயனுரும் தம்முடையபிரபந்தங்களைத் தமிழிலேயே எழுதியிருப்பதன்றி, தம்முடைய "திரு ஆதியுலா"வில் தமிழ்ப்பாஷையை "ஒள்ளியதீந்தமிழின் றெய்வவடிவாள்" என்று மேலாகப் பாராட்டிப் பேசியிருப்பதுடன் மலையாளமறியாத தமிழனைப்போல் "மடல் வண்ணம்" "எழிலுடையவெண்பா" "இருந்தமிழ்" என்று ஒருவகைப்பிரயத்தனமுமில்லாமல் எழுதியிருக்கிருர்.

மறைந்துபோய் இன்னமும் மலையாளத்தில் வழங்கிவருகின்றன*. இவ்விதம் ஆங்கிலதேசத்தில் இப்பொழுது மறைபட்டிருக்கும் பல மொழிகள் அத்தேசத்தைவிட்டு கி. பி. 17-ம் நூற்றாண்டில் அமேரிக்காவுக்குப்போனவர்களின்சந்ததியாரால் இன்றும் வழங்கப்பட்டு வருவது பிரசித்தம்.

4. "வைக்கத்திற்கு வாதபுரீசுவரம் என்றபெயர் வழங்குகிறதென்பதும், அந்தக்ஷேத்திரத்துமூர்த்தியின்திருநாமம் பெருந்துறைக்கோவில்ப்பனென்பதும், அங்குச் சிவன் ஞானாசிரியனாகத்தோன்றி உபதேசஞ்செய்ததைக் காட்டும் திருவிழா நடந்துவருகிறதென்பதும் மற்றொரு ஆக்ஷேபமாம்.

மேற்கண்டவிதம் பெயர்களிருந்து திருவிழாநடந்துவருவதிற் பிரத்தியவாயம் என்ன? மேல்நாட்டுத் திருக்கோகர்ணத்திற்கு எதிராக ஏழாம்நூற்றாண்டுமுதற் பிரசித்திபெற்று, மாறன்சடையனைச் சேர்ந்த கல்வெட்டுடன்விளங்கும் திருக்கோகர்ணேசர்கோவில் புதுக்கோட்டையைச் சார்ந்திருக்கிறது. இது ஆதித்திருக்கோகர்ணம் ஆகிவிடுமா? இவ்விதமே ஜெம்புகேசுவரம் கடம்பவனம் என்ற ஸ்தலங்கள் பெயர்பெற்று அநேகநூற்றாண்டுகளுக்குமுன் இச்சீமை நார்த்தாமலையில்விளங்கிவந்தன. அகத்தியருக்குத் திருக்கல்யாணக்காட்சி பரமசிவன் அளித்ததாக விழாநடத்தும் ஊர்கள் பல.

மகா-ா-ா-ஸ்ரீ சேஷையாவர்கள் தமக்குநேராகத் தெரிந்ததாகக் கூறுத இவ்வாக்ஷேபத்திற்கண்ட விஷயங்கள் உண்மையாயின், முக்கியமந்திரியாயிருந்த மாணிக்கவாசகர் வைக்கத்திற்கு ஒருபெரிய

---

* இவ்வுண்மையைவற்புறுத்த என் நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ கோபாலையரவர்கள் பின்கண்ட உதாரணங்களைக் கோணப்பட்டியினின்று எழுதியனுப்பியிருக்கிறார்கள்.

1. போற்றி-(போற்றிமார்) பூசைசெய்பவர். ஆசாரக்கோவை, 64-ம் செய்யுள்.

2. பூசை - பூனை. கம்பராமாயண அவையடக்கம்.

3. சூரல் - பிரம்பு. "சூரல்பம்பியசிறுகான்யாறே"

4. திரிதல் - பிரிதல். தொல்காப்பியம், சொல், சேனாவரையருரையில் 172, 222.

5. பெண்டாட்டி - பெண். ஷை ஷை. ஷை. 163.

6. பூழி, புழுதி. கம்பராமாயணம், யுத்தகாண்டம்.

நன்மைசெய்திருக்கவேண்டுமென்றும், ஆதலால் அவ்வூர் மகாஜனங்கள் அம்மந்திரியின்பெயரை அவர் சுற்றுப்பிரயாணஞ்செய்து அங்குப் போயிருந்தசமயத்தில் அவ்வூருக்கு இட்டிருக்கலாமென்றும், பிறகு ஆளுடையார்கோவிலில்நடந்த அற்புதவிஷயங்களைக்கேள்வியுற்று, ஞானோபதேச உத்ஸவத்தை அவ்வூரில் ஏற்பாடுசெய்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது. (ஜார்ஜ்டௌண், இன்னிஸ்பேட்டைமுதலியபெயர்களைநோக்குக.)

5. குதிரைகளிறங்குவதற்கு மேலைச்சமுத்திரக்கரையே ஏற்றதாகவிருந்ததன்றிப் பாண்டிநாட்டுக் "குணகடற்பானுறுதுறை"கள் அக்காலத்தில் "தாவுமா"விறங்குபட்டினங்களாகக் காணப்படவில்லையென்பது மற்றொரு ஆக்ஷேபம்.

இவ்விதம் எழுதியிருப்பது கொஞ்சம் வேடிக்கையாயிருக்கிறது. இவர்களாக மாணிக்கவாசகருக்கு ஒருகாலத்தைக்கற்பித்துக்கொண்டு* புராணத்திற்கூறியபடி அக்காலத்திற் கீழ்சமுத்திரக்கரையிற் குதிரையிறங்குவதற்கான துறைமுகங்கள் இருந்தன என்று சொல்லக்கூடாதாகையாற் புராணத்திற்கூறியவிஷயம் தவறு என்று ஆக்ஷேபிக்கிறார். எனக்குத்தோன்றியவரை சோழநாடு பாண்டியநாடுகளுக்குத்தேவையானகுதிரைகள் மேலைச்சமுத்திரக்கரையிலிறங்கிப் புலிகளுக்கிறையாகும்படி "கடமும் வெற்பும்" கடந்துவந்திரா. முன்னாளிற் கீழ்சமுத்திரக்கரையில் வேண்டிய துறைமுகங்கள் இருந்திருத்தல்வேண்டுமென்பது பழையநூல்களால் விளங்குகிறது. மாணிக்கவாசகர்காலமென்று குறிக்கப்பட்டிருக்கும் கி. பி. மூன்றாம்நூற்றாண்டிற்குமுன் 700-வருஷகாலமாக இலங்கைத்தீவிற்கும் பாண்டிய சோழ அரசர்களுக்கும் சம்பந்தம் இருந்துவந்தவிஷயத்தை இலங்கைச்சரித்திரங்களாகிய மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்நாகரி என்றநூல்கள் கூறுகின்றன.

கி. மு. ஆறுநூற்றாண்டிலேயே அநேக பாண்டியநாட்டுப்பெண்கள் இலங்கைத்தீவிலுள்ளவர்களுக்குமாலையிட்டு அவர்களுடன்வாழ்ந்துவந்தார்களென்றும், கி. மு. மூன்றாம்நூற்றாண்டில் ஏலேலர்

* சென்னைச் சிலாசாசன இலாகாவின் 1908-ஆம்வருஷத்திய 409-ஆம் இலக்கக்கல்வெட்டில் இவர் விக்கிரக ஆராதனத்திற்காகவும்,1906-ஆம்வருஷத்து 165-ஆம் இலக்கக்கல்வெட்டில்(கி.பி. 1135-ஆம்வருஷத்தில்) இவர் திருச்சாழலை ஓதுவதற்காகவும் நிலங்கள்விடப்பட்டதாகக்கூறியகாலங்களை மறுக்கமுடியாது.

என்ற ஒருவீரர் ஒரு பெரியபடையுடன் இலங்கைத்தீவுக்குப்போய் அத்தீவைக் கைப்பற்றிக்கொண்டார் என்றும், சோழநாட்டார்களும் பாண்டியநாட்டார்களும் அடிக்கடி தனுக்கோடிக்கெதிராகவுள்ள தலைமன்னார்ரயில்ஸ்டேஷனுக்கு அருகிலிருக்கும் மாந்தோட்டத் துறைமுகப்பட்டினத்தில் * இறங்கி அத்தீவைக் கொள்ளைகொண் டார்களென்றும், கி. பி. 110-ஆம்வருஷத்தில் ஒரு சோழராஜன்† அத்தீவுக்கு நேரேபோய் 12,000 சிங்களர்களைச் சிறைசெய்து தன் னாட்டுக்குத்திரும்பினான் என்றும், இலங்கைத்தேசத்து அரசனான கஜபாகு என்றவன், கி. பி. 113-ஆம்வருஷத்தில் யாழ்ப்பாணத்துறை முகத்தினின்று பெரியபடையுடன்புறப்பட்டுச் சோழநாட்டைஜெயி த்துச் சிறையாக்கப்பட்ட சிங்களர்களுடன் அநேக சோழநாட்டு மனிதர்களையும்பிடித்துக்கொண்டு தன்னுடைய தீவிற்குத் திரும்பி னான் என்றும் அறிகிறோம்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப்பிற்பட்ட விஷயங்களில் இரண் டைக் குறித்துக்காட்டலாம்.

(1) புதுக்கோட்டைச்சீமையின் பழையபிரிவுகளுக்குள், ஜய சிங்ககுலகாலவளநாடு, இரட்டைப்பாடிகொண்டசோழவளநாடு, விருத ராஜபயங்கரவளநாடு என்பவற்றைப்போன்ற கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாடு என்ற ஒருபிரிவு இருந்தது. இப்பெயரி லுள்ள விருதின்பொருள், "இராமனைப்போலக் கடலுக்கு (ஸேது) அணைபோடாமற் கப்பல்களில் ஏறிப்போய் இலங்கைத்தீவைத் தன் கைவசப்படுத்திக்கொண்டான், சோழன்" என்பதுதான்.

---

* அநேகதமிழர்கள் புத்தநாடான அத்தீவிலேயே ஹிந்துதேவதைகளின் கோவில்களைக்கட்டி அங்கு வசித்துவந்தார்கள் என்று இலங்கைச்சரித்திரத்தி னின்று அறிகிறோம். இம்மாந்தோட்டம் சுந்தரமூர்த்திசுவாமிகளால்,

"ஈழநாட்டுமாந்தோட்டம்"

என்று திருநாட்டுத்தொகைத்தேவாரத்திற் பாராட்டப்பெற்றது.

† இச்சோழன் பட்டினப்பாலையைக்கொண்ட கரிகாற்பெருவளவன். இலங் கைத்தீவிலிருந்துவந்தவர்களைக் காவிரிப்பூம்பட்டினங்கட்டும்வேலையில் ஏற் படுத்தினான். கஜபாகு என்பவன் முதற்கயவாகு எனப்படுபவன். சிலப்பதி காரத்தைப் பார்க்க. புதுக்கணக்கின்படி மேற்கண்டவருஷங்களை கி. பி. 166 என்றும், கி. பி. 169 என்றும் கொள்ளல்வேண்டும்.

(2) பிறகு பாண்டியர்களுக்குள் யாரைச்சேர்ந்தது பாண்டிய நாடு என்ற அவர்கள்சந்தேகத்தைத்தீர்க்க யுத்தம்நேர்ந்தசமயத்தில் இலங்காபுரதண்டநாயகர் என்ற ஒருவர் பெரியசைன்யத்துடன் இலங்கைத்தீவினின்று பாண்டிநாட்டிற்குவந்து, பொன்னவராவதியிற் குலசேகரபாண்டியனை உடுத்தஉடையுடன் போர்க்களத்தினின்று ஓட அடித்து, ஒன்பதுமைல்விஸ்தீரணம்வரை ஒரேபிணக்குவியலாகச் செய்ததுமன்றி, இராமேசுவரத்தைப் பிடித்துக் கீழ்சமுத்திரக்கரைத் தொண்டித்துறைமுகத்தை*த்தாக்கி மறுபடி இரண்டுதடவை குலசேகரபாண்டியனை அபஜயப்படுத்தியதும் பலர் அறிந்தவிஷயம்.

மேற்கண்டபடையெடுப்புக்களெல்லாம் மேலைச்சமுத்திரக்கரை மூலமாகவா நடந்தன? யானைப்படைகளையும் இலங்கைத்தீவினர் உபயோகித்துவந்தனர் என்று தெரிகிறது.† அவை இந்தியாவுக்கு வந்திராவிட்டாலும் குதிரைப்படைகள் வந்தேயிருக்கவேண்டும். தோப்புத்துறைக்கும் நாகபட்டினத்திற்கும் எதிரிலுள்ள யாழ்ப்பாணத்தினின்றுபுறப்பட்டபடைகள்கூட மேலைச்சமுத்திரக்கரைத் துறைமுகங்களில் இறங்கிவந்தனவென்று மகா-ா-ா-ஸ்ரீ. சேஷையரவர்கள் நம்மை நம்பச்சொல்லுகிறார்கள்.

"துறைமுகத்துக்குவேண்டிய சகலசாதனங்களையுமுடையது" என்றுகூறப்பட்ட முத்துப்பேட்டை‡, அதிவீரராமபட்டினம், கி. பி. 2-வது நூற்றாண்டிலேயே ரோமாபுரிநூலாசிரியர்களாற் குறிக்கப்பெற்றதும்,

"வங்கங்களு முயர்கூம்பொடு வணங்கும்மறைக் காடு"

என்று சுந்தரமூர்த்திசுவாமிகளாற் பாராட்டப்பெற்ற கடற்கரைப்பட்டினத்தைக்கொண்டதும், இலங்கைத்தீவினின்று 40 மைல் தூரமேயுள்ளதுமான கோடிக்கரைப்பக்கங்கள், "வங்கமலிகடல்" நாகபட்டினம், காரைக்கால், மணல்மேற்குடி, "பண்டைக்காலத்தில்

---

* இது பெரியதுறைமுகப்பட்டினமாக இருந்தது. சேதுபதிகளின்விருதுகளில் "தொண்டியங்காவலன்" என்பது ஒரு சிறந்தவிருது. இவ்விஷயம் அவர்கள் கல்வெட்டுக்களினாலிவிளங்கும்.

† மகாவம்சம் 25-ஆம் அத்யாயத்தைப்பார்க்க.

‡ இப்பட்டணங்களிற் பலவற்றைப்பற்றி "Imperial Gazetteer of India" என்ற புஸ்தகத்தைப்பார்க்க.

ஒரு பெரிதானதுறைமுகமாக இருந்த"தென்று கூறப்பெற்ற ஆளுடையார்பட்டினம், இக்காலத்திலும் கப்பல்கள்வந்துநிற்கும் அம்மாள்பட்டினம், கோட்டைப்பட்டினம்,'ஓங்கிரும் பரப்பின், வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட,வகிலுந் துகிலு மாரமும் வாசமும்' என்னும் சிலப்பதிகார அடிகளிற்கூறப்பெற்றுள்ள தொண்டி, தேவி பட்டினம் "சங்கெடுப்பவர்களைக்கொண்ட" "நினைத்ததுமுடித்தான் பட்டினம்" என்னும் "புணரியோதம்பணிலமணியுந்தும்" திருப்புல் லாணிக்கடுத்த கீழைக்கரை, கொற்கையம்பெருந்துறை, தூத்துக்குடி, காயற்பட்டினம், குலசேகரபட்டினம் முதலிய துறைமுகங்களின் பாகங்கள் கடற்கரைத்துறைமுகங்களாவதற்கு ஏற்றஇடங்களென்று சோழபாண்டியர்கள் அறியாமல் வனத்தையும் வெற்பையும் பகைவர் களின்நிலத்தையுங்கடந்து மேலைச்சமுத்திரக்கரைக்கு வருந்திச் சென்று அங்குள்ள துறைமுகங்களிற் கப்பலேறி நீண்ட கப்பல் யாத்திரைகள்செய்து இலங்கைத்தீவிற்குச்சென்றார்களென்று நம்பு வது சிரமமாயிருக்கிறது.

யாவராலும் கொண்டாடப்படும் வின்செண்ட் ஏ. ஸ்மித் (Mr. Vincent A. Smith) என்னும் துரையவர்கள் "கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலே சோழமண்டலச்சமுத்திரக்கரையிலுள்ளவர்கள் தங்களுக்கு மேற்கிலுங் கிழக்கிலுமுள்ளதேசங்களுடன் சுறுசுறுப் பாய்வியாபாரஞ்செய்துவந்தார்களென்று தமிழ்நூல்களினின்றும், க்ரீக்நூலாசிரியர்களும் ரோமாபுரிநூலாசிரியர்களும் எழுதியிருப்பதி னின்றும் தெரியவருகிறதென்றும், சோழநாட்டுமரக்கலங்கள் பயந்து கொண்டு கடற்கரையோரமாகவேபோய்வந்தன என்று எண்ணக் கூடாதென்றும், துணிவுடன் ஒருவிதயோசனையுமின்றி வங்காளக் குடாக்கடலைத்தாண்டி வங்காளத்துக்கும் பர்மாவுக்கும் சோழதேசத் துக்கப்பல்கள்போய்வந்தன என்பதல்லாமல் இந்துமகாசமுத்திரத்தை யுங் கடந்து சுமாட்ரா, ஜாவா* முதலிய வெகுதூரத்திலுள்ள தீபங்களு டனும் வியாபாரஞ்செய்துவந்தன என்றும் கூறுகிறார். இக்காட்டு

*மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் தம்முடைய புராதன இந்தியா என்ற புஸ்தகத்தில் சீனதேசத்துடனும் சுமாட்ரா, ஜாவாமுதலியதீவுக ளுடனும்வெண்டும் வியாபாரஞ்செய்வதற்கேற்ற பெரிய வர்த்தகத்துறைமுக மாய்விளங்கியது தொண்டி என்று கூறியிருக்கிறார். மற்றப்புத்தகங்களினின்று அநேகதுறைமுகப்பட்டினங்கள் புதைபட்டுப்போய் இக்காலத்திற் கண்டுபிடிக் கப்பட்டுவருகின்றன என்றும், நாகபட்டினம் தூத்துக்குடி என்ற ஊர்கள் பழங் காலத் துறைமுகப்பட்டினங்கள் என்றும் விளங்கும்.

மாலுமிகள் கப்பலோட்டுவதில் மிகவும் திறமையுள்ளவர்களாகையால் ஆதியில் இலங்கைத்தீவின்மன்னர்கள் இவர்களையே தங்கள்மாலுமிகளாக நியமித்துக்கொண்டார்கள். இத்தேசத்துக்கப்பல்கள் இரண்டாயிரத்தெழுநூறுகனஅடி* கொள்ளும்படியான பெரியமரக்கலங்களாகவிருந்தனவென்று கி. பி. முதல்நூற்றாண்டிலிருந்த ரோமாபுரி நூலாசிரியர் ஒருவர் கூறியிருக்கிறார். கீழ்கரையிலிருந்த ஆந்திர தேசத்து கி. பி. முதல்நூற்றாண்டுக்காசு ஒன்றில் இருகூம்புள்ளதும் பெரிதாகத்தோன்றுவதுமான மரக்கலம் அச்சிட்டிருப்பதைப்பார்க்கலாம். இனி யாவரும் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம் தமிழ் நாட்டு ஆளுடையார்கோவில் என்றே கொள்வார்கள்† என்று நம்புகிறேன்.§

எஸ். இராதாகிருஷ்ணையர்,
B. A., F. M. U.

---

* சிலநூற்றாண்டுகளுக்குமுன் ஐரோப்பாவினின்று மூவாயிரம்மைல்தூரமுள்ள அமெரிக்காவுக்கு யாத்திரைசெய்ய இரண்டாயிரம் கனஅடிகொண்ட சிறுமரக்கலங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

† தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதிமஹால் என்னும் புத்தகசாலையிலுள்ள சிவயோகாம்பிகை பிள்ளைத்தமிழும் சிவயோகாம்பிகை திருப்பொன்னூசலும் பழையநூல்களாகவே காணப்படுகின்றன. இவற்றைக்கொண்ட கையெழுத்துச் சுவடியிற் பல இடங்களிற் பின்கண்டவாக்கியங்களைப்போன்றபாகங்களைக் காணலாம்.

(i) "அரந்தாங்கி சூழ்நாடா வமைமிழலை நாடு" ஊசல்.

(ii) "வேதண்ட வெண்முத்து வெண்களிற் றுக்கொம்பு.........
தெள்ளுநீர்வெள்ளாறுபாய்,
திருமிழலை நாட்டுப்பெ ருந்துறை யெனப்படுஞ் சிவபுரிக் கொருசெல்...
வே...சப்பாணியே" பிள்ளைத்தமிழ்.

§ "மயர்வறமதிநலம்" அருளப்பெற்றவர்கள் என்று கொண்டாடப்படும் ஆழ்வார்கள் சிலபிரபந்தவகைகளின் இலக்கணத்தை அறியாதவர்களாயவற்றை மாணிக்கவாசகர்திருவாசகத்தினின்றும் அறிந்து, அவ்விதப்பிரபந்தங்களையியற்றினார்களென்று மகா-௱-௱-ஸ்ரீ சேஷையரவர்கள்கூறியிருப்பது, தொல்காப்பியத்துப் புறத்திணையியலிலும் செய்யுளியலிலுமுள்ள பிரபந்தவகைகளைக் காட்டும் சூத்திரங்களையும், இசைப்பிரபந்தவகைகளை விவரிக்கும் சங்கீதரத்நாகரத்தின் பிரபந்த அத்யாயத்தையும், சிலப்பதிகாரத்தின் உரைகளையும், மற்ற ஆதாரங்களையும் வைத்துக்கொண்டு ஆராயத்தக்கது. விஷயம் தெரிந்தவர்களை இதைப்பற்றிச் செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதப்பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

பத்திராதிபர்குறிப்பு.

"புறப்பொருள்வெண்பாமாலை மூலமும் உரையும்":—

(இரண்டாம்பதிப்பு.)

இப்புத்தகம், கலைமகணிலையங்கள்போலப் பெருமைவாய்ந்து விளங்கிய மிகப்பழமைவாய்ந்த தமிழ்நூல்கள்பலவற்றையும், சிதலுண்டழியாவண்ணம் ஒன்றன்பின் ஒன்றாகப் பரிசோதித்துப் பதிப்பித்துவருதலைப் பொழுதுபோக்காகக்கொண்டு, தமிழைப் பாதுகாத்துதவிவாநின்ற மகாமகோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால், 1895-ஆம் வருஷத்திற் பதிப்பிக்கப்பட்டுப் பிரசித்திபெற்றிருந்ததென்பது யாவருமறிந்ததே. அதன்பின்பும் அவர்களுக்குக் கிடைத்த கையெழுத்துப்பிரதிகளாலும், பலநூல்களினாராய்ச்சிமுதலியவற்றாலும் அவர்களறிந்த பலவிஷயங்களாலும் மூலமும் உரையும் மேலுந் திருத்தப்பெற்று இப்பொழுது இரண்டாம்பதிப்பாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பில் அத்திருத்தங்கள் ஆங்காங்கு அமைக்கப்பெற்றும், முற்பதிப்பில் வேறுவேறாக இருந்த அரும்பத அகராதி முதலியவை ஒருங்கேதொகுக்கப்பெற்றும், முதற்பதிப்பிற் சேர்க்கப்பெறாதனவும், மூலம் உரை இரண்டிலும் உள்ளனவாய்த் தமிழ்நூல்களின் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவுமாகிய பற்பல அரும்பதங்கள், பற்பலவிஷயங்கள், இன்பம்விளைக்கும் அநேகந்தொடர்மொழிகள், பல உவமைகள் ஆகிய இவை நூதனமாகச் சேர்க்கப்பெற்றும் உள்ளன. மேற்கூறிய அரும்பதங்களுட் பெரும்பாலனவற்றிற்குப் பொருள்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நல்லாசிரியரைநாடி வழிபட்டு வருந்தி அரிதிற்கற்கத்தகுஞ் சங்கநூற்பயிற்சியை யாவருமெளிதினடையுமாறு ஐயரவர்கள் அச்சிட்டுதவிவரும் அருமையான பலதமிழ்ப்புத்தகங்களுள் இது வொன்று. இதன்விலை ரூபா ஒன்றரை.

ஒரு விலையில்லாதபுத்தகம்.

(ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும், வெற்றிவேற்கையும்.)

காலக்கிரமத்தில் தமிழ்க்கல்வி குறைவடைந்துகொண்டுவருவது கண்ட தேசபாஷாபிமானிகள்பலரும் அதனைத் தன்னிலைநிறுத்தக்

கருதிப் பலபல யோசனைசெய்துவரும் இத்தருணத்தில், புதுக்கோட்டைராஜ்யத்தைச்சார்ந்த கோனாப்பட்டென்னும் நகரத்துள், தமிழ்கற்கும் மாணவர்களுக்கெல்லாம் இலவசமாய்க்கற்பிக்கும்படி அந்நகரத்தாரால், கற்பகவிநாயககலாசாலையென்று ஒரு தமிழ்க்கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு நன்றாய்நடைபெற்றுவருவது பலரும் அறியத்தக்கதே.

அக்கலாசாலைக்கட்டடத்தில் ஞானசம்பந்தநற்சபையெனப் பெயரியதொரு தமிழ்ச்சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. அக்கலாசாலைமாணவர்களைப் பரீக்ஷிக்கும்பொருட்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தலைவரதாணையைமேற்கொண்டு நான் அங்குச்சென்றிருந்தபொழுது பிறவூர்களிலுமுள்ள கலாசாலைகளிற் றமிழ்கற்றுவரும் மாணவர்களுக்கெல்லாம் வேண்டும் புத்தகங்கள் விலையின்றிக்கொடுக்கப்பெறின் அது தமிழ்க்கல்விவளர்ச்சிக்கு ஒரு சாதகமாகுமென்றும், ஒவ்வொரு தர்மசீலரும் தம்மாலெளிதிலுதவக்கூடிய ஓரொரு புத்தகத்தை யச்சிட்டுதவ விரும்புவாராயின் இது சுலபசாத்தியமாகுமென்றும் தெரிவித்துக்கொண்டதை யங்கீகரித்து, அச்சபையின் அபிமானிகளுள் ஒருவராகிய ஸ்ரீமான்-பெ. அ. லெ. அண்ணாமலைச்செட்டியாரவர்களின்பொருளுதவியாலும், அச்சபையின்காரியதரிசியாகிய ஸ்ரீமான்-சுப்பிரமணியன்செட்டியாரவர்களது நன்முயற்சியாலும் இப்பொழுது பரீக்ஷார்த்தமாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை என்னும் நீதிநூன்மூலபாடங்களை ஒருபுத்தகமாக அச்சபையார் அச்சிட்டுத் தமிழ்கற்கும் மாணவர்களுக்கு விலையின்றிக்கொடுத்துவருகிறார்கள்.*

---

* இப்புத்தகத்தைத் தபால்மூலம் பெறவிரும்பும் அயலூர் மாணவர்கள் புத்தகம் ஒன்றுக்குக் காலணாவீதம் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் தபாற்கூலியை மட்டும் அனுப்பவேண்டியிருப்பதால் கலாசாலையுபாத்தியாயர்கள் மாணவர்பலர்க்கும் வேண்டும்புத்தகங்களுக்குப் புத்தகமொன்றுக்குக் காலணாவீதம் கூடும் தொகையைச்சேர்த்து ஒருதடவையாய் அடியிற்கண்ட விலாசமுடையவர்களுக்கனுப்பி எளிதிற் பெற்றுச்கொள்ளலாம்.

மானேஜர்	பெ. அ. லெ.
கற்பகவிநாயக கலாசாலை	அண்ணாமலைச்செட்டியாரவர்கள்
கோனாப்பட்டு	கோனாப்பட்டு
புதுக்கோட்டையிலாகா.	புதுக்கோட்டையிலாகா.

இது கற்பவர்களுக்கெல்லாம் வரையறையின்றிவழங்கும் வண்மையாதலால் ஒப்புறவறிதலென்னும் போறத்தின்பாற்படும். இன்னோரன்ன அறங்களே "ஒப்புரவினல்வருங்கேடெனினஃதொருவன், விற்றுக்கோட்டக்கதுடைத்து" எனத் தெய்வப்புலவராலும் சிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வுதவி சிறிதாயிருப்பினும் "தினைத்துணை நன்றிசெயினும்பனைத்துணையாக்,கொள்வர்பயன்றெரிவார்" என்றபடி பயனால் மிகப்பெரியதாகவே அறிவுடையோரால் பாராட்டற்பாலது.

இம்முறையே மற்றுமுள்ள நகரத்தார்களிற்சிறந்த தர்மசீலர்களும், பிற தனவந்தர்களும் தத்தம் தகுதிக்கேற்றவாறு மற்றும் வெவ்வேறுபுத்தகத்தைப் பதிப்பித்து விலையின்றி யுதவிவர முன்வருவாராயின் அது இலவசக்கல்விபுகட்டுமுறையின் ஏதுவாய்நின்று எண்ணிறந்த புகழ்புண்ணியங்களாகிய இம்மைமறுமைப்பயனிரண்டையும் அளிக்கத்தக்கதாயும், "ஒல்லும்வகையானறவினையோவாதே, செல்லும் வாயெல்லாஞ்செயல்" என்னுந் திருக்குறளுக் கிலக்கியமாயுமிருக்கும்.

உ

புத்தகமதிப்புரை.

(1) ஜகஜ்ஜோதி:—இது, மதுரை ஸேதுபதி ஹைஸ்கூல் உதவியுபாத்தியாயர் பிரும்மஸ்ரீ எஸ். சாமிநாதையரவர்களால் இனியதமிழ் நடையிலெழுதப்பெற்றதொரு புதியநாவல். இதில் தெய்வபக்தி, குருபக்தி, தாய்தந்தையர்வழிபாடு, மாதராடவரொழுக்கம், விருந்தோம்பல், நட்பு, அறிவு, கலகக்கேடு, வீரம், முயற்சி, சாந்தமுதலிய பலகுணங்களின் நலங்களும் ஆங்காங்குக் காட்டப்பட்டிருப்பதுடன், வனம், உத்தியானம், மாலைக்கால முதலியவற்றின் இயற்கையானவருணனைகளும், சமயோசிதச்செய்யுள்களும் காணப்படுகின்றன. சிறுவர் சிறுமியர்களும் படிக்கும்படி தெளிவானநடையிலெழுதப்பட்டிருக்கும் இப்புத்தகத்தையும், இவர்கள் பாடிய திருவாலவாயுடையார் திருப்பள்ளியெழுச்சியையும் படிப்பவர்களுக்கு இவர்களது தமிழ்

நடையெழுதுஞ்சாமர்த்தியமும், செய்யுளியற்றுந்திறமையுஞ் செவ்விதின்விளங்கும். இப்புத்தகத்தின் விலை அணா—8. வேண்டுவோர் எஸ். சாமிநாதையரவர்கள், உபாத்தியாயர், சேதுபதிஹைஸ்கூல், மதுரை என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

(2) ஜர்மன்தேசவிளக்கமும், பிரிட்டிஷ் ஆளுகையின்நன்மைகளும்:- இது திருவுறந்தை ராஜகோபாலன் என்பவரால் அவ்விரண்டையும்பற்றிச் சுருக்கமாய் ஒருவர்க்கொருவர்சம்பாஷிப்பதாகவைத்துப் பதினாறுபக்கத்திலெழுதப்பட்டிருக்கிறது. இதைத் தனிப்புத்தகமாக வெளியிட்டிருப்பதைவிடப் பத்திரிகைகளில்வெளியிடுவது பயன்படத்தக்கது.

(3) முரஹரி :—(துப்பறியும்நாவல்) இது, ஸ்வதேசநண்பன் எனப்பெயர்பூண்ட ஒருவரால் எளியதமிழ்நடையிலெழுதித் திராவிடாபிமானி என்னும்பத்திரிகையில் வெளியிடப்பட்டுப் பின்பு வேலூர்க்காலேஜின் பிரதமதமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் புத்தகமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 5. வேண்டுவோர் பதிப்பித்தோர்க் கெழுதிப்பெறலாம்.

(4) ஆத்திசூடிநீதிகதைகள்:—இது, ஆத்திசூடிவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு, அவ்வவ் வாக்கியத்துக்குப் பொருத்தமான இதிகாசபுராணங்களிலும் பிறவற்றிலுமுள்ள கதைகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவுங்காட்டி, மாணாக்கர்கள்விரும்பிக்கற்குமாறு அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்—ஆர். ஹரிஹரையரவர்களால் எழுதப்பட்டு வேலூர்க்காலேஜின் பிரதம தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் கலாசாலைமாணவர்களுக்கும் பிறர்க்கும் மிகப் பயன்படத்தக்கது. இதன்விலை அணா எட்டு. வேண்டுவோர் வெளியிட்டவர்க்கெழுதிப்பெறலாம்.

(5) 1. பக்திவிளக்கம், 2. தத்துவஞானபோதினியென்னும் அத்வைதமஞ்சரி, 3. மஹாத்துமாக்கள் என்னும் மூன்று புத்தகங்களும் லோகானுகூலன்பத்திராதிபர் ஸி. எஸ். இராதாகிருஷ்ணையரவர்களால் முறையே பக்தியைப்பற்றியும், அத்வைதத்தைப்பற்றியும், மஹாத்துமாக்களைப்பற்றியும் தமக்குத்தெரிந்தவிஷயங்களைப் பிறரும் அறியும்படி விரித்தெழுதப்பட்டுள்ளன. இவற்றின் விலை முறையே அணா 12, 8, 4. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

குறிப்பு:—மேற்கண்ட ஏழு புத்தகங்களும் "பாண்டியன்புத்தகசாலை"க்குக் கொடுக்கப்பட்டன.

பத்திராதிபர்.

"திருப்பெருந்துறையென்பது தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலே" என்பதன் குறிப்பு.*

IX-ஆம் ஆதாரமாக அச்சிட்டிருக்கும் சிலாசாசனம், ஆளுடையார்கோவில் வடக்கூர்க் கைலாசநாதர்கோவில் அர்த்தமண்டபத்தின் தூணொன்றிற் காணப்படுகிறதென்றும், அது திரிபுவனவீரதேவர்க்கு "யாண்டு முப்பத்துநாவில்" வெட்டப்பட்டதென்றும், அவ்வூர்த் தென்னங்தோப்பொன்றிலுள்ள வீற்றிருந்தபெருமாள் எனப்படும் ஆதிகேசவப்பெருமாள்கோவிலின்மதில்வெளிப்புறத்திற் பின்கண்ட வேறொருகல்வெட்டுக் காணப்படுகிறதென்றும் என் நண்பர் மகா-௱-௱-ஸ்ரீ வெங்கடேசுவராஜயர் அவர்கள் மறுபடி எனக்குப் பட்டுக்கோட்டையினின்று எழுதியிருக்கிறார்.

"ஸகாஸ்யூ3 ருஙாஅ மேல செலலாநினற ஸ்ரீவீரூபபண உடையாறகு செலலாநினற க்ஷயவஸபவஸுவரததது கூ௨ஹைநாயறறு வ௰வ-ஒவக்ஷ த தீதியையும் வியாழககிழமையும பெறற ரேவதிநாள மிழலைககூறறதது நடுவிலகூறறு ஸ்ரீஹமெஷஹ த ணியூா திருப பெருநதுறையாந பவித்ரமாணிகக ஹுாவேதமஙகலதது ஸபைெ (ஸ) யாரோம.................."

இச்சாசனம், கி. பி. 1379-ஆம்வருஷம்முதல் கி. பி. 1400-ஆம் வருஷம்வரை விஜயநகரத்தில் அரசாண்ட (இரண்டாம்) விரூபண்ண உடையார் எனப்படும் (முதல்) விரூபாக்ஷமகாராஜா அவர்கள்காலத்தில்வெட்டப்பட்டது. இச்சாசனம் ஏற்பட்டு ஐஞ்நூற்றுமுப்பது வருஷம் ஆகிறது. இரும்பாநாட்டைப்போல் திருப்பெருந்துறையும்

---

*இது இச்செந்தமிழ்முழுதும் பதிப்பானபின்பு கிடைத்தமையால் "திருப்பெருந்துறையென்பது தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலே"என்பதையடுத்துச் சேர்க்கப்படவில்லை.

மிழலைக்கூற்றத்து நடுவில்கூற்றில் அக்காலத்தில் இருந்ததென்று இச்சாசனத்தால் அறிகிறோம்.

ஆதலால் வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணமும், வடமொழி ஹாலாஸ்யமாஹாத்மியமும், கானநாட்டுவிருத்தாந்தமும், (நான்கு) திருப்பெருந்துறைப்புராணங்களும், சிவயோகாம்பிகைபிள்ளைத்தமிழும்; சிவயோகாம்பிகைதிருப்பொன்னூசலும், மிழலைச்சதகமும் புதுக்கோட்டைச்சீமைக் கல்வெட்டுக்களும், ஆளுடையார்கோவிலிலேயே உள்ள சிலாசாசனங்களும், மேற்குறித்த விடுகதைபோன்றபழமொழியும், செப்பேட்டுச்சாசனங்களும் ஒரேவாக்காக எள்ளளவும் சந்தேகத்திற்கிடமில்லாமல் "ஸ்ரீமகாதீர்த்தம்" என்னும் திருப்பெருந்துறை, "ஜகவந்நாதஸ்வாமி"யான ஆளுடையசுவாமியீற்றிருக்கும் ஆளுடையார்கோவிலே என்றும், மாணிக்கவாசகர் கீழ்சமுத்திரக் கரைக்குப்புறப்பட்டுப்போகும்வழியிற் சிவன்செயலாற் செயல்வேறுபட்டுக் கடற்றுறையல்லாத திருப்பெருந்துறையிலேயே வாழ்நாளைக் கழிப்பதாகத் தீர்மானித்து அங்கே தங்கிவிட்டாரென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோற்காட்டுகின்றன.